# மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2026 ஜூன் 1–15 தொகுதி 24 இதழ் 20 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200


## மாமேதை கார்ல் மார்க்ஸிற்கு செவ்வணக்கம்!



# இகக(மாலெ)விடுதலை மத்தியக் குழு கூட்டம்
## 2026 மே 29 – 31 – சென்னை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) விடுதலையின் மத்திய கமிட்டிக் கூட்டம் மே 29, 30, 31 ஆகிய நாள்களில் சென்னையில் நடைபெற்றது. முதல் நாள் காலை சென்னை, கன்னிமாரா நூலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கார்ல் மார்க்ஸ் சிலைக்கு, இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர், அரசியல் தலைமைக்குழு உறுப்பினர், மூத்த தோழர் ஸ்வதேஷ், தோழர் வீ.சங்கர் உள்ளிட்ட அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள், தோழர்கள் பாலசுந்தரம், குமாரசாமி, சந்திரமோகன், ஆசைத்தம்பி உள்ளிட்ட மத்திய கமிட்டி தோழர்கள் செவ்வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து நடைபெற்ற மத்தியக் குழு கூட்டத்தில், அனைத்து விதங்களிலும் மக்களுக்கு விரோதமாகச் செயல்படும் பாசிச பாஜக அரசை முறியடிக்க, இடதுசாரிகள், முற்போக்கு ஜனநாயக சக்திகள், மாணவர், இளைஞர் ஒன்றிணைந்து போராட அழைப்பு விடுக்கப்பட்டது. சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர் சங்கத் தொழிலாளர்கள் மத்தியக் குழு உறுப்பினர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்கள்.














மாலெ தீப்பொறி

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் குழுவின் அரசியல் ஏடு**

**இருவார இதழ்**
***2026 ஜூன் 1-15***
*தொகுதி 24 இதழ் 20*

முதன்மை ஆசிரியர்
**சங்கர் .வீ**

ஆசிரியர்
**ஜி. ரமேஷ்**

ஆசிரியர்குழு
**பழ. ஆசைத்தம்பி**
**பாலசுந்தரம்**
**அ. சந்திரமோகன்**
**கே. ஜி. தேசிகன்**

மேலாளர்
**சொ. இரணியப்பன்**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

**நிர்வாக அலுவலகம்**
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

# சமூகநீதி; மதச்சார்பின்மைக்கு வெடி வைக்கும் சங்கிகளின் சதி வேலை!

பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு உத்தரப் பிரதேச யோகி அரசு, இஸ்லாமியர்கள் தெருக்களில் தொழுகை நடத்தக் கூடாது, பள்ளிவாசல்களில் இடமில்லை என்றால் சிப்ட் முறையில் தொழுகை நடத்திக் கொள்ளுங்கள், மீறி தெருக்களில் தொழுகை நடத்தினால், சிறையிலடைக்கப்படுவீர்கள் என்று உத்தரவு போட்டது. அது மட்டுமின்றி, பக்ரீத்திற்காக மாடுகளை வெட்டக் கூடாது என்று சட்டம் போட்டது. தேர்தல் ஆணையத்தை தன் கைக்குள் வைத்துக் கொண்டு, எஸ்ஐஆரைப் பயன்படுத்தி மேற்கு வங்கத்தில் திருட்டுத்தனமாக ஆட்சியைப் பிடித்துவிட்ட பாஜக அரசு, அங்கும் மாடுகளை, கன்றுகளை அறுக்கத் தடை கொண்டு வந்தது. தேர்தல் வெற்றிக் கொண்டாட்டத்தைத் தொடர்ந்து வந்த இந்த தடையாலும் பல இடங்களில், இஸ்லாமிய மக்கள் மீது சங்கிகள் கொலை வெறித் தாக்குல் நடத்தினர். தமிழ்நாட்டில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முழு ஒத்துழைப்புடன் திருப்பரங்குன்றத்தில் இல்லாத தீபத் தூணில் தீபம் ஏற்றுவோம் என பிடிவாதம் பிடித்து, கலவரத்தை ஏற்படுத்தி, காலூன்ற நினைத்த பாஜகவிற்கு தமிழ்நாட்டு மக்கள் தேர்தலில் தக்க பாடம் புகட்டிவிட்டார்கள். ஆனாலும், ஆர்எஸ்எஸ் அதனுடைய சதி வேலையை நிறுத்துவதாக இல்லை. பக்ரீத் பண்டிகைக்கு சில நாள்களே இருக்கும் சமயத்தில், கோவையைச் சேர்ந்த ஆர்எஸ்எஸ் சங்கியான சூர்யா என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் கடந்த மே 18ம் தேதி தமிழ்நாட்டில் மாடு, கன்றுகளை பொது இடத்தில் அறுக்கக் கூடாது என்றும் அதற்காகவே ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே உரிய சான்றிதழ் பெற்று அறுக்க வேண்டும் என்றும் அந்த மாடு 10 வயதிற்குக் கீழ் இருக்கக்கூடாது அதுபோல் வயது முதிர்ந்த, பயன்பாட்டிற்கு உதவாத மாடாக இருக்க வேண்டும் அதற்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் என்றும் உத்தரவிடக் கோரி வழக்கு தொடுத்தார். அந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், வி.லட்சுமிநாராயணா அமர்வு முன் கொண்டு வரப்பட்டது. அந்த மனுவில் கேட்டபடியே வழிகாட்டுதல் வழங்கி, அதை கறாராக அமல்படுத்திட தமிழ்நாடு அரசிற்கும் காவல்துறைக்கும் உத்தரவிட்டார்கள் நீதிபதிகள். பக்ரீத்தை முன்னிட்டு அந்த உத்தரவை தமிழ்நாடு முழுவதும் கறாராக நடைமுறைப்படுத்திட, மாநில காவல் துறை அதிகாரிகளுக்கும் அனைத்து மாவட்ட, மாநகர காவல் துறை அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பியது மட்டுமின்றி, அது தொடர்பான அறிக்கையையும் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் ஏடிஜிபி. டிஎஸ்.அன்பு. காலங்காலமாக தமிழ்நாட்டில் பக்ரீத் கொண்டாடப்படுகிறது. இதுநாள் வரை இதற்கு முன்பிருந்த எந்தவொரு அரசும் இஸ்லாமியர்களுக்கு எதிரான இப்படியொரு உத்தரவை போட்டு நடைமுறைப்படுத்தியது இல்லை. இஸ்லாமியர்களுக்கு எதிரான இந்த வழக்கில் தவெக அரசு ஆட்சேபணை எதுவும் தெரிவித்ததாகத் தெரியவில்லை. திருப்பரங்குன்றம் மலையில் அமர்ந்து மாமிசம் சாப்பிட்டார்கள் இஸ்லாமியர்கள் என்று பிரச்சனையை ஆரம்பித்து, தர்கா முன்னிருக்கும் தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்றார்கள். இந்த உத்தரவு இஸ்லாமியர்களுக்கு எதிரானது மட்டுமின்றி, சிறு தெய்வ வழிபாட்டின் போது ஆடு, கோழி பலி கொடுப்பதற்குமே தடையாக மாற வாய்ப்புள்ளது. திருப்பரங்குன்ற தீபத் தூண் பிரச்சனையில் இதுநாள் வரை எந்தவொரு கருத்தும் சொல்லாத தவெக ஆட்சியில் இருப்பதை, முன்னாள் ஆர்எஸ்எஸ்காரரான நிர்மல்குமார் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சராக இருப்பதை மிகச் சரியாக பயன்படுத்தி காய் நகர்த்தியுள்ளார்கள் ஆர்எஸ்எஸ் சங்கிகள். தவெக அரசில் பங்குபெற்றுள்ள ஐயுஎம்எல், விசிக இந்த உத்தரவுக்கு எதிராக எதுவும் சொல்லாமல் இருப்பது வியப்பளிக்கிறது. இதுபோன்ற உத்தரவுக்கு உடனடியாக எதிர்ப்புக் குரல்கள் எழவில்லை என்றால், ஏற்கனவே காக்கிக்குள் காவிகள் ஒளிந்து கொண்டிருக்கும் நிலையில், வரும் கார்த்திகை மாதம் திருப்பரங்குன்ற தீபத்தூண் பிரச்சனை தமிழ்நாட்டின் மதச்சார்பின்மைக்கு, சமூக நீதிக்கு பேராபத்தாக மாறும். இப்போது முதல் சமூகநீதி–மதச்சார்பின்மை ஆட்சி தொடங்குகிறது என வெளிப்படையாக அறிவித்த முதலமைச்சர் வெகு துரிதமாக செயல்படுவார் என எதிர்பார்ப்போம். திருவள்ளுவர் சநாதனிதான் என்று ஆர்.என் ரவி ஊதிய அதே சங்கை “பொறுப்பு ஆளுநர்” அர்லேக்கரும் ஊதி, பொறுப்பின்றி பேசியிருக்கிறார். புதிய ஆட்சிக்கு நிறைய வேலை இருக்கிறது! ❑

# டிஜிட்டல் சீற்ற வெடிப்பிலிருந்து; கூட்டு நம்பிக்கை மற்றும் மாற்றம் நோக்கி...

**– திபங்கர் –**

இந்தியாவின் டிஜிட்டல் தளங்கள் நெடுக கரப்பான் பூச்சி ஜனதா கட்சிப் (சிஜேபி) புயல் தொடர்ந்து வீசுகிறது.

2011ஊழல் எதிர்ப்பு இயக்கம் ஆம் ஆத்மி கட்சி எழவும், நரேந்திரமோடி 2014ல் பதவிக்கு வரவும் ஏவு தளமாக அமைந்தது; அதனால் சிஜேபி நிகழ்வுப்போக்கு தொடர்பாக, அது தோன்றுவதற்கான காரணங்கள் அதன் தாக்கம், அது எதை நோக்கிச் செல்லும் என்ற விசயங்களில் சந்தேகங்களும் விவாதங்களும் எழுவது இயல்பானதாகும்.

புயல் வீசும் போது, இந்த நிகழ்வு தொடர்பாக பலரும் கவனித்து விவாதித்து வரும் போது, துவக்கத்திலேயே சில விஷயங்களை சொல்வது அவசியமாகிறது.

கூடுதலான வெளிப்படைத் தன்மையையும் பொறுப்பேற்றலையும் கோருவதற்காக, சமூக ஊடக மேடைகள், தகவல் அறியும் உரிமை ஆகிய கருவிகளை பயன்படுத்தும், மாற்றுக் கருத்து உள்ளவர்களை, இந்திய தலைமை நீதிபதி சூரியகாந்த், கரப்பான் பூச்சி, ஒட்டுண்ணி போன்ற சொற்களால், இகழ்ந்து பேசியிருக்காவிட்டால், சிஜேபி என்ற நிகழ்வு நடந்திருக்காது. சில தினங்களுக்கு முன் 22 லட்சம் நீட் தேர்வு விண்ணப்பதாரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் எதிர்காலத்தை பாதிக்கும், மேலும் ஒரு வினாத்தாள் கசிவு நடந்தது; இந்த அனுபவமும் சிஜேபி புயல் தீவிரத்திற்கு காரணமாகும்.

இது, ஒரு தனி மனிதரின் கருத்து என்பதிலிருந்து, சில மணி நேரத்தில் சில நாட்களில், ஒன்றிணைந்த டிஜிட்டல் முன் முயற்சியானது; லட்சோப லட்சம் இணையவாசிகள், இந்த முன் முயற்சியை ஆகப் பெரிதாக மாற்றினார்கள்.

சிஜேபி உருவாக உடனடி உந்து விசையாக இருந்த விஷயங்கள் தாண்டி, இதற்கு Z தலைமுறையிடம் மிகப்பெரிய பிணைப்பு ஏற்பட்டதற்கான சூழலையும் நாம் காண வேண்டும். "நல்ல நாட்கள்" "இந்திய உலகளாவிய பெரிய சக்தி" என்ற மோடி அரசாங்க வெற்று வாக்குறுதிகளின் பலூன் உடைந்தது, முறை சார்ந்த விதத்தில் அடுத்தடுத்த தேர்தல்கள் திருடப்படுவது, இந்தியாவின் நிறுவனங்கள் சரிந்து நொறுங்கியது, குறிப்பாக மேலோங்கிய ஊடகங்களும் நீதித்துறையும் சரிந்தது, ஆம் ஆத்மி பரிசோதனை மோசமாக சரிந்தது என நிலவிய சூழல் காணத்தக்கதாகும்.

மோடி அரசாங்கமும் சங்பரிவாரும், இந்த டிஜிட்டல் புரட்சியால் கலகலத்துப் போயுள்ளனர். சிஜேபியின் X தள கணக்கை முடக்கினார்கள். அயல்நாட்டில் இருந்து இயங்கும் சக்திகள் இந்தியாவை சீர்குலைக்க மேற்கொள்ளும் சதி என்கிறார்கள். கரப்பான் பூச்சி கொல்லியான, கருப்பு மற்றும் சிவப்பு 'ஹிட்' தெளித்து அழித்துவிடுவோம் என்ற உருவகம் மூலம் மிரட்டுகிறார்கள்.

சிஜேபியின் அய்ந்து அம்ச அறிக்கை, நம் காலத்து அய்ந்து அடிப்படையான புரையோடிப் போயுள்ள தீமைகளிலும், அவற்றிற்கான தீர்வுகளிலும் கவனம் குவிக்கிறது. தகுதியுள்ள எல்லா வாக்காளர்களின் வாக்களிக்கும் உரிமை, ஊடக சுதந்தரத்தையும், நிறுவனங்களின் தன் ஆட்சி சுதந்திரம் காப்பது, குறிப்பாக நீதித்துறை சுதந்திரம் காப்பது, அனைத்து சட்டமியற்றும் அவைகளிலும் அமைச்சரவைகளிலும் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு, பாஜக சலவை இயந்திரத்தை தடுக்க, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கட்சி மாறலை தடுக்க, 20 ஆண்டுகள் தகுதி நீக்கம், இவையே அந்த அய்ந்து அம்சங்கள்.

இந்தியா முழுவதும் மாணவர்கள் மத்தியத்துவப்படுத்தப்பட்ட நீட் தேர்வு முறையை ரத்து செய்ய வேண்டும், தேசிய தேர்வு முகாமை அமைப்பை கலைக்க வேண்டும் என ஏற்கனவே கோரி வருகிறார்கள். அதற்கேற்பவே, பொருத்தமான விதத்தில் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்ய வேண்டும் என்பது, உடனடி இயக்க கோரிக்கையாகி உள்ளது.

இந்த டிஜிட்டல் சீற்றமும் நடவடிக்கையும் உணரத்தக்க விதத்தில் மாற்றத்திற்கான கூட்டு நிர்ப்பந்தமாக மாறுமா, எப்போது மாறும் என்பவையே, முக்கியமான விஷயங்களாகும். களத்தில் நடக்கும் நேரடி போராட்டங்கள் டிஜிட்டல் உலகில் பெரிதாக மாறுவதை, நாம் கண்டுள்ளோம். மிகச் சமீபத்தில் டிஜிட்டல் போராட்டம் பெரிய களப் போராட்டமாவதையும் கண்டுள்ளோம்.

சம குடியுரிமை கோரும் இயக்கம் அரசமைப்பு சட்ட முகவுரை வாசிப்பை கொள்கை முழக்கமாவதையும், ஹம் தேக்கங்கே (நாம் காண்போம்) அல்லது காகஜ் நகி திக்கயங்கே (ஆவணங்களை காட்ட மாட்டோம்) போராட்டப் பாடல்களாக மாற்றியதையும் கண்டோம். வரலாற்றுச் சிறப்புமிக்க, விவசாயிகள் போராட்டம் டிராக்டர் மற்றும் மூவர்ணக் கொடி பேரணிகள்,

வெவ்வேறு போராட்டங்களின் ஒருமைப்பாடு சங்கமங்களை உருவாக்கியதையும் கண்டோம்.

நல்வாழ்வு தரும் கூலிக்கான, எட்டு மணி நேரத்திற்கான தொழிலாளர் எதிர்ப்புகளுடன், திணிக்கப்பட்ட சிக்கன நடவடிக்கையின் வலிகளால் அவதிப்படும் பொது மக்களுடன், மனச்சாட்சிப்படி நடந்ததற்காக சிறையில் உள்ளவர்களின் விடுதலைக்கான கோரிக்கையுடன், வீடுகளை கடைகளை இடிக்கிற வாழ்வாதாரங்களைப் பறிக்கிற புல்டோசர் நிறுத்தப்பட வேண்டும், பல லட்சம் இந்திய இஸ்லாமியர்களைக் குறிவைக்கும் வெறுப்பு இயக்கம் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் சிஜேபி என வடிவம் எடுத்துள்ள வெளிப்படுகிற டிஜிட்டல் இயக்கம் நெருக்கமாக்கிக் கொள்ளுமா? புள்ளிகளை கோலமாக்குவதும் இணைப்புக்களை வலுப்படுத்துவதும் போராட்டங்களோடு ஏற்கனவே தொடர்புடைய செயல்வீரர்களின் பொறுப்பாகும். அதன்மூலம் இந்த டிஜிட்டல் கோபமும் உறுதியும் கூட்டுக் கனவாக நம்பிக்கையாக ஒருமைப்பாடாக வளர வேண்டும். ❑

**தமிழாக்கம் – எஸ்கே**

# மக்கள் அவஸ்தையும் மோடி அறிவுரையும்

**– வீ.சங்கர் –**

பெட்ரோல், டீசல் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ.108. சமையல் எரிவாயு சிலிண்டருக்கு 50 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. வணிக சிலிண்டர் விலையோ ஆயிரங்களில் ஏறியுள்ளது. ஒரு அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.96 க்கும் அதிகமாக உயர்ந்து கொண்டே போவதால், ரூபாயின் மதிப்பு சரிந்து கொண்டே இருக்கிறது. அதன் காரணமாக, அத்தியாவசியப் பொருட்கள், சேவைகளின் விலைவாசி அதிகரிக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுகிறது. வருமானம் மிகக்கடுமையாக சரிகிறது. அதிகரித்துவரும் விலைவாசியின் காரணமாக, வாழ்க்கை நடத்த முடியவில்லை என குஜராத் மாநில சூரத் நகரிலிருந்து பல்லாயிரக்கணக்கான புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கள் வேலையை விட்டு, அந்த ஊரை விட்டு வெளியேறிய துயர வீடியோ வைரல் ஆனதைக் கண்டோம். டெல்லியைச் சுற்றியுள்ள பல மாநிலத் தொழில் நகரங்களில் – ஹரியானாவின் மானேசர், உத்தரபிரதேசத்தின் நோய்டா உள்ளிட்ட பஞ்சாப், ராஜஸ்தான், உத்தரகண்ட் நகரங்களில் – தொழிலாளர் கலகங்கள், அதன்மீதான ஒடுக்குமுறைகள், ஆயிரக்கணக்கான தொழிலாளர், சமூக செயல்பாட்டாளர்கள் சிறையில் அடைக்கப்படுவது போன்றவையும் தொடர்வதைக் காண்கிறோம்.




மக்களின் வாழ்வாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, ஏற்கனவே குறைந்த வருமானத்தில் வாழ முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் மக்களை தியாகம் செய்ய சொல்கிறார் பிரதமர் மோடி. அப்படித் தியாகம் செய்வதுதான் 'பொருளாதார தேசபக்தி' என்று சொல்வதன் மூலம், அப்படிச் செய்யாவிட்டால் 'தேச துரோகம்' என சொல்லாமல் சொல்கிறார்.

கோவிட் வந்தாலும் சரி, பணமதிப்பகற்றல் என்றாலும் சரி, உக்ரேன் போர் என்றாலும் சரி, தற்போது சந்திக்கும் ஈரானின் மீதான அமெரிக்கப்போரானாலும் சரி, தியாகம் செய்ய வேண்டியவர்கள் சாமான்ய மக்கள்தான்.

"தேசம் முதலில், வசதியைவிட கடமை முதலில்" என நாட்டு மக்களுக்கு அறிவுரை வழங்குகிறார் மோடி.'பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டும்' என்பது மக்களுக்கு மட்டும்தான். மோடிக்கு கிடையாது. அவரது கார்ப்பரேட் நண்பர்களுக்கு

கிடையாது.

வீட்டிலிருந்து வேலை செய்யுங்கள் என்கிறார் மோடி. நாட்டிலுள்ள தொழிலாளர்களில் 93 சதவீதத்திற்கும் மேலானவர்கள் அமைப்பாக்கப்படாத தொழிலாளர்கள். தினசரி வீட்டிலிருந்து வெளியே சென்று வேலை செய்தால்தான் அவர்கள் வீட்டு அடுப்பு எரியும். வீட்டிலேயே எப்படி இருக்க முடியும். மோடி கட்டளைகள் பணம் படைத்தவர்களுக்கு ஒரு பெரிய விசயம் இல்லை. ஆனால், அன்றாடம் காய்ச்சிகளுக்கு அது பெரும் சோகம்.

தங்கம் வாங்காதீர்கள் என்கிறார் மோடி. மக்கள் பயந்து போய், திருமணத்திற்கு தாலி கூட கிடைக்காதோ என பதறிப்போய் இருக்கிறார்கள். தங்க வியாபாரிகளின் பதுக்கல் நடவடிக்கையைத்தான் தூண்டி விட்டிருக்கிறார் மோடி.

பெட்ரோல், டீசல் பயன்பாட்டைக் குறையுங்கள் என்கிறார் மோடி. ஆனால், அவர் பின்னால் செல்லும் கார்கள் எண்ணிக்கை குறைந்தபாடில்லை. காரில் 5 பேர் பயணம் (கார் பூலிங்) செய்யுங்கள் என்கிறார். கார் வைத்திருக்கும் நடுத்தர வர்க்க குடும்பங்கள் வாரத்திற்கு ஒருமுறை குடும்பத்தோடு காரில் செல்வதே அவர்களுக்கு பெரும் பாடு.

விமான பயணத்தை குறையுங்கள் என்று சொல்லிவிட்டு அவர் உலகம் முழுவதும் தனி விமானத்தில் சுற்றுப்பயணம் சென்று விட்டார்.

மின்சார வண்டிகளுக்கு மாறுங்கள், ரயிலில் பயணம் செய்யுங்கள், ரசாயன உரங்கள் பயன்படுத்துவதற்குப் பதிலாக இயற்கை விவசாயத்துக்கு மாறுங்கள் என்றெல்லாம் கட்டளைகள் போட்டிருக்கிறார் மோடி.

மக்கள் பொறுப்பு, மக்கள் தியாகம் பற்றி பேசும் பிஜேபி அரசு, தன் பங்கு என்ன என்பதைப் பற்றி, என்ன கொள்கை மாற்றங்கள் அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி வாய் திறக்க மறுக்கிறது.

மாறாக, முதலாளிகளும், விமான நிறுவனங்களும் ஈரான் மீதான அமெரிக்க போரினால் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக 181 பில்லியன் மூலதன நிதியுடன் கூடிய ஒரு கடன் திருப்பும் உறுதியை வழங்கிடும் திட்டத்தை உருவாக்கி இருக்கிறது. கச்சா எண்ணெய் விலை 10 சதவீதம் அதிகரித்தாலும் பணவீக்கம் 50 அடிப்படைப் புள்ளிகள் ஏறும், வளர்ச்சி அடிப்படைப் புள்ளிகள் 15 சதவீதம் இறங்கும் என ரிசர்வ் வங்கியின் நிதி அறிக்கை கூறி இருக்கும் போது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல், விலைவாசி உயர்வு சுமையை மக்கள் மீதே திணிக்கிறது.

உலக எண்ணெய் விலை குறைந்த போதும் கூட, ஒன்றிய அரசு வரியை அதிகரித்ததனால், அந்த விலை குறைவின் பயன் மக்களுக்கு கிட்டவில்லை. அந்த நேரத்தில் இதர நாடுகள் ரஷ்யாவிடமிருந்து இறக்குமதி செய்ய தடை இருந்ததால், ரஷ்யாவிலிருந்து இந்தியாவிற்கு மலிவான விலையில் இறக்குமதி செய்து அதனை உலக நாடுகளுக்கு விற்று பெரும் லாபம் சம்பாதித்தது அம்பானிதான். ஆனால், மக்களை தியாகம் சொல்லும் மோடி, பெரும் முதலாளிகளுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக சலுகைகளை வாரி வழங்குகிறார்.

வளமான இந்தியா படைப்பதாக சொன்னதை விடுத்து இப்போது அதனை மக்களின் சிக்கன இந்தியாவாக உருமாற்றி வருகிறார் மோடி. 'நல்ல நாள்', 'அமிர்த காலம்' எல்லாம் காற்றில் கரைந்து போய், இப்போது 'பேரழிவின் காலம்' என நமக்குச் சொல்கிறார் மோடி. ஈரான் மீதான போரால் சிலிண்டர் கேஸ் விலை உயர்ந்தால் என்ன செய்ய முடியும் என மோடிக்காகப் பரிந்து பேசுகிறார் தமிழ்நாட்டின் தொழில் அமைச்சர் மாண்புமிகு கீர்த்தனா அவர்கள்.

கொரோனா ஒரு பேரிடர். ஆனால், தற்போதைய விலைவாசி உயர்வை அதனோடு ஒப்பிட்டு மக்களை தியாகம் செய்யச் சொல்வது, அதுதான் தேசபக்தி என்பது ஒரு மோடி மஸ்தான் வேலைதானே தவிர வேறில்லை. பிஜேபி அரசும் மோடியும் தாம் கடைபிடிக்கும் கொள்கைகளை, அதன் உள்நாட்டு காரணங்களை, தமது கொள்கைத் தவறை மறைப்பதற்காக, அரசின் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்காக பயன்படுத்தும் ஒரு தந்திரமே அது.

2014ல் மோடி ஆட்சிப் பொறுப்பேற்றபோது, பெட்ரோல் விலையும் சரி, டாலர் மதிப்பும் சரி, ரூ.60 அளவில் இருந்தது. தற்போது, இரண்டும் ரூ 90ஐ தாண்டிவிட்டன.

ஈரான் மீதான அநியாயமான போர் இந்தியாவிற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிந்தும், போர் தொடுக்கும் அமெரிக்கா – இஸ்ரேலுக்கு ஆதரவாக இந்தியா ஏன் நிறுத்தப்பட வேண்டும்? அதனால் திணிக்கப்படும் சுமையை ஏன் மக்கள் ஏற்க வேண்டும்? அமெரிக்க கட்டளைகளுக்கு அடிபணிந்து இந்தியாவின் பொருளாதார வர்த்தக முடிவுகளை மேற்கொள்ளும் சுதந்திரத்தை ஏன் அடகுவைக்க வேண்டும்? அதானி செய்த ஃபிராடுக்கு எதிராக அமெரிக்காவில் நடந்து வரும் வழக்கிலிருந்து அவரைக் காப்பதற்காக கொடுக்கப்படும் விலைதான் நாட்டின் நீண்டகால சுதந்திரத்தை, பொருளாதார நலன்களை அமெரிக்காவிடம் அடகு வைப்பதா?

பிஜேபி அரசின், மோடியின் தவறான கொள்கைகள் காரணமாக, கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகள் காரணமாக, அமெரிக்க ஆதரவு கொள்கைகள் காரணமாக எழுந்துவரும் நெருக்கடிக்கு பொறுப்பு ஏற்பதற்கு மாறாக, அந்த நெருக்கடியின் சுமை சாமான்ய மக்கள் மீது திணிப்பதில்தான் அரசு குறியாக இருக்கிறது. ❑

# தவெக தேர்தல் அறிக்கை என்ன சொல்கிறது?–(2)

‘அறம்’, ‘பொருள்’ தலைப்புகளில் தவெக தேர்தல் அறிக்கை பற்றி சென்ற இதழில் பார்த்தோம். மூன்றாவது பாலான ‘இன்பம்’ பகுதியில் 3 தூண்களில் 70 விதமான வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

“மருத்துவம் மற்றும் சுற்றுச்சூழல்” பகுதியில், மருத்துவம் தொடர்பாக 11 வாக்குறுதிகளும் சுற்றுச்சூழல் தொடர்பாக 10 வாக்குறுதிகளும் உள்ளன. ரூ.25 லட்சத்துக்கான ‘மக்கள் நலன் காப்பீடு’ அட்டை, கட்டணமில்லா முழு உடல் பரிசோதனை, டெலி மருத்துவ வசதிகொண்ட 3000 மக்கள் நல நிலையம், ரூ 500 கோடியில் மனநல மருத்துவத் திட்டம் போன்ற கவனத்திற்குரிய அறிவிப்புகள் உள்ளன. 495 நோயாளிகளுக்கு ஒரு மருத்துவர் என (உலக சுகாதார நிறுவனம் 1000:1 என பரிந்துரைக்கிறது) தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. ஆனால், இன்னும் செல்ல வேண்டிய தூரம் அதிகமுள்ளது. ஒரு பக்கம் ஏழை, எளிய மக்கள் முழுமையாக அரசு மருத்துவமனைகளையே நம்பி இருக்கிறார்கள். இவை மருத்துவர், செவிலியர் பற்றாக்குறை (கிராமப்புர மருத்துவ முறைகளில் 70% மருத்துவர் பணியிடங்கள் காலியாக உள்ளன) நலிந்துபோன கட்டமைப்பு, கையூட்டு காரணமாக, மக்கள் தேவையை நிறைவேற்றுவதாக இல்லை. மறுபுறம் கார்ப்பரேட், சிறிய, பெரிய தனியார் மருத்துவமனைகள், மருத்துவ கல்லூரிகள், பயிற்சி நிறுவனங்கள் புற்றீசல் போல் பெருத்து வருவதும் நடுத்தர மக்கள், வசதி படைத்தவர்கள் இந்த மருத்துவக் கட்டமைப்பை நோக்கி விட்டில்பூச்சிகளாய் படை எடுப்பதையும் காணமுடிகிறது. முந்தைய முதல்வர் எம்ஜிஆர் ஆட்சியில் காலூன்றிய இந்த ஆபத்து அடுத்துவந்த திராவிட ஆட்சிகளில் ராட்சத உருவமெடுத்துள்ளது. இதன் மீது கை வைக்காமல் “மகிழ்ச்சியான தமிழ்நாடு திட்டத்தை” கொண்டுவர முடியாது. கை வைக்கும் துணிச்சலை தவெக விடம் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால், “பெரு நிறுவனங்கள், சமூக அமைப்புகள், கல்வி நிறுவனங்களுடன் இணைந்து மாநிலம் தழுவிய மகிழ்ச்சி சூழலை தவெக அரசு உருவாக்கும்” என்ற வாக்குறுதி மக்களின் இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுமா?

**சுற்றுச் சூழல் சவால்கள்?!**

ரூ. 3000 கோடி காலநிலை பட்ஜெட், பசுமை தமிழ்நாடு, சுத்தமான ஆறுகள், தூய




காற்று, கூவம், அடையாறு மீட்பு இயக்கம், சதுப்பு நிலப்பாதுகாப்பு என அறிக்கை நம்பிக்கை ஏற்படுத்துகிறது. பசுமை தமிழ்நாட்டை உருவாக்க, தற்போதுள்ள 17.59 விழுக்காடு காடுகள் வரும் அய்ந்தாண்டுகளில் 33 விழுக்காடாக அதிகரிக்கப்படும் என்று கூறுவது மிக நல்ல அறிவிப்பு. அதேசமயம், தொழில்மயமாக்கமும், நகர்மயமாக்கமும் அவற்றால் உற்பத்தியாகும் பேரழிவுக் கழிவுகள் அகற்றத்திலும் பெரும் மாற்றுக் கொள்கைகளும் விவசாய மறுமலர்ச்சியும் வேண்டும். அப்படி எதுவும் அறிக்கையில் தெரியவில்லை.

“உலகத்தர கட்டமைப்பு” பகுதியில் 27 வாக்குறுதிகள் உள்ளன. ‘மின்சாரம் மற்றும் பசுமை ஆற்றலின்’ கீழ் 5 வாக்குறுதிகளும் ‘நவீன கட்டமைப்பின்’ கீழ் 8 வாக்குறுதிகளும் ‘கிராம வளர்ச்சி’ பொருளின் கீழ் 5 வாக்குறுதிகளும் ‘நகரவளர்ச்சி’ தலைப்பில் 9 வாக்குறுதிகளும் உள்ளன. 24 மணி நேரம் தங்குதடையற்ற மின்சாரம் தொடங்கி, மாதம் தோறும் கட்டணமுறை, அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும் சிறு குறு தொழில்களுக்கு மின் கட்டணம் குறைப்பு, சோலார் மின்சாரத்துக்கு மாறுவோருக்கு

மானியம், 5000 அரசுப் பேருந்துகளையும் மின்சார வாகனமாக்குவது என வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன. நல்லது.

நவீன கட்டமைப்பாக, துறைமுகம், ரயில் இணைப்பு, விமான நிலையங்கள், ஏஅய் தொழில் நுட்பத்துடன் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி விபத்துகளை தடுப்பது, சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் …. தனியார் வாகன உரிமையாளர்களுக்கு 'நல்ல சமாரியன் உயிர் காப்பாளர் விருது' (சமாரிடன், பைபிளில் வரும் கதாபாத்திரம்) போன்றவை அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த வாக்குறுதிகளை மேலெழுந்தவாரியாக பார்த்தாலே மெகா கார்ப்பரேட் திட்டங்கள் என்பது புலனாகும். 'சென்னை, கோவை, தூத்துக்குடி மூன்று இடங்களில் சரக்குப் போக்குவரத்து, சரக்கு பாதுகாப்பு பணிகளை ஒருங்கிணைக்கும் பல்திறன் பரிமாற்றப் பூங்கா நிறுவப்படும். இதன்மூலம், தமிழக வர்த்தகர்களின் ஏற்றுமதி செலவுகள் 20% முதல் 30% வரை குறையும். தென்கிழக்காசியாவில் தமிழ்நாடு சிறந்த வர்த்தக பரிமாற்ற மய்யமாக வளர்ச்சியடையும்' எனும் அறிக்கையின் வழித்தடம் தெளிவாக்கிவிடுகிறது.

## நகர வளர்ச்சியும் கிராம வளர்ச்சியும்?!

நகர வளர்ச்சிக்கு 9 வாக்குறுதிகளை அளித்துள்ள அறிக்கை கிராமப்புர வளர்ச்சிக்கு 5 வாக்குறுதிகளை தந்துள்ளது. '2031க்குள் சேரியில்லா நகரங்கள்' தொடங்கி, சென்னை, … சென்னை, திருச்சி, மதுரை, கோவை மாநகரங்களை உலகத்தரத்தில் உருவாக்குவது, சொத்து வரிக்குறைப்பு ஆகியவை கவனத்துக்குரியவை. தொடர்ந்து தோற்றுப்போன 'சேரியில்லா நகரங்களை' 5 ஆண்டுகளில் கொண்டு வரப்போகும் தவெக வாக்குறுதி உண்மையிலேயே ஆச்சரியமூட்டுகிறது. உலகத்தரமான கிராம வளர்ச்சிபற்றி பேசும் 'அறிக்கை', தமிழ்நாட்டிலுள்ள 15,978 கிராமங்களில் முதல் கட்டமாக 5000 கிராமங்களை மாதிரி கிராமங்களாக எடுத்துக் கொண்டு அவற்றில் நவீன நகர்ப்புர (அப்துல் கலாமின் புறா திட்டம்) கட்டமைப்பைக் கொண்டுவர உறுதி அளிக்கிறது. கிராமப்புர தொழில் உள்கட்டமைப்புத்திட்டம் மூலம், 1000 கிராமப்புர தொழில் தொகுப்புகளை உருவாக்கி லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் கூறுகிறது.

ஆனால், ஒரு கோடிக்கும் மேற்பட்ட கிராமப்புர தொழிலாளர் நம்பியிருக்கும் கிராமப்புர ஊரக வேலைத்திட்டம் "150 நாட்களாக உயர்த்தி, உரிய வருவாய் நிர்ணயிக்க முயற்சி செய்யப்படும்" என்று மட்டுமே கூறுகிறது. (ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள கிராமப்புர வறியவர் விரோத, கூட்டாட்சி விரோத விபி கிராம்ஜி சட்டம் பற்றி இதுவரை தவெக கருத்து எதுவும் சொல்லாதது வியப்பொன்றுமில்லை)! பொருள் பிரிவில் விவசாயிகள், கூலித் தொழிலாளர் பற்றிய தலைப்பில் பேசியிருக்க வேண்டிய விசயத்தை இன்பம் பிரிவில் ஏன் பேசுகிறது என்று வாசகர்களுக்கு தோன்றலாம். 'அறிக்கை' முழு வீரியத்துடன் நகர்ப்புர சார்பைக் கொண்டிருக்கிறது. முழுமனதோடு கிராமப்புர புறக்கணிப்பை வெளிப்படுத்துகிறது. உலகத்தரம் பற்றி அறிக்கை அடிக்கடி பேசுகிறது. எது உலகத்தரம்? உலகத்தரம் எப்படி அளவிடப்படுகிறது? யார் இதை முடிவு செய்கிறார்கள் என்ற ஆராய்ச்சிக்குள் சென்றால் 'உலகத்தரம்' பல்லிளிக்கும்.

அறிக்கையின் 10வது தூணாக "மக்கள் அரசு; உண்மை மற்றும் நேர்மையான நிர்வாகம்" உள்ளது. 22 வாக்குறுதிகள் உள்ளன. "நமது ஒவ்வொரு அரசுத்திட்டமும் உறுதியாகவும் நேரடியாகவும் மக்களுக்குச் சென்றடையும் வகையில் இருக்கும் என்பது தொடங்கி, உரிமை அட்டைகள் மூலம் (இருக்கும் அட்டைகளுக்கே ஒன்றுமில்லை; இன்னொரு அட்டையா? என்றே ஏழைகள் புழுங்குவார்கள்). 'மக்களே அரசின் வழிகாட்டிகள்' என்று நம்பும் தவெக, "மக்கள் நேரடியாக அனுப்பும் புகார்கள் பற்றி சட்டமன்றம் ஒருநாள் முழுக்க விவாதிக்கும்" என்று உறுதி அளிக்கிறது. 'லஞ்சத்திற்கு எதிராக பூஜ்யம் சகிப்புத்தன்மை'யை வலியுறுத்தும் அறிக்கை, லோக்அயுக்தாவை வலுப்படுத்தவும் கனிம வளம், மணல் கொள்ளையை ஒழிக்கவும் போதையில்லா தமிழகத்தைக் கொண்டு வரவும், காவல் படுகொலையில் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி வழங்கவும் உறுதி அளிக்கிறது. ஆனால், மது அருந்துவதை சீராகவும் படிப்படியாக குறைக்க உறுதியளிக்கிறது. (மது போதை வளையத்துக்கு வெளியே நிறுத்தப்பட்டுள்ளது தள்ளாட்டமா? தடுமாற்றமா என பலருக்கு கேள்வி எழலாம்). இதுவரை கேள்விப்பட்டிராத புதுமையாக "சமூக நிதிநிலை அறிக்கை, சமமான வட்டார வளர்ச்சி நிதிநிலை அறிக்கை, கலாசார, பண்பாட்டு நிதிநிலை அறிக்கை, சூழலியல் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்று கூறுகிறது. ஆவலோடு காத்திருப்போம்!

தமிழ்நாட்டை பொருளாதார இறையாண்மை பெற்ற மாநிலமாக ஆக்குவோம் என்று உறுதியளிக்கும் அறிக்கை, 'புதிய வரிகளை சுமத்தாமல், இழப்புகளைத் தடுத்து, வருவாயை பெருக்கி, புதிய வழிகளில் பொருளாதார கட்டமைப்புகளை உருவாக்கும்' என விவரிக்கிறது. ஆனால், எல்லாவழிகளிலும் மாநிலங்களின் பொருளாதார "இறையாண்மையை" தகர்க்கும் ஒன்றிய அரசிடமிருந்து எப்படி தமிழ்நாட்டின் பொருளாதார இறையாண்மையை காப்பது? அறிக்கை அமைதி காக்கிறது. முத்தாய்ப்பாக, ரூ 50,000 கோடியில் 'வியூக முதலீட்டு ஆணையம்' ஒன்றை அமைக்கப்போவதாக வாக்குறுதியளிக்கிறது. "வரிகள், சலுகைகளை

(மத்திய அரசிடமிருந்து மானியங்கள்) நம்பியிருக்கும் முறையிலிருந்து விலகி, செல்வத்தை உருவாக்கும் புதிய பொருளாதார மாதிரியை நோக்கி தமிழகத்தை தவெக கொண்டு செல்லும். .....தமிழக அரசு, தவெக ஆட்சியில் தொழில் துறையினருடன் இணைந்து முதலீடு செய்து புதிய மதிப்புகளை உருவாக்கி, அதன் உரிமையைப் பகிர்ந்து கொள்ளும். இது லட்சக்கணக்கான உயர்தர வேலை வாய்ப்புகளை உருவாக்குவதுடன் மாநிலத்திற்கு வரி அல்லாத புதிய வருவாய் ஆதாரங்களையும் ஈட்டித்தரும்" என்கிறது. இதிலிருந்து தவெக வின் பொருளாதார கொள்கை, தெளிவாகி விடுகிறது. "சூரியனையும் இலை, பூ பழத்தை" தோற்கடித்தாலும் பெரும் கார்ப்பரேட் பாதையை அறிக்கை வெற்றிபெறச் செய்கிறது. தவெக வெற்றிக்கு பாடுபட்ட ஜிக் தொழிலாளர், ஆட்டோ தொழிலாளருக்கு சில நல்ல அறிவிப்புகளை அறிவித்துள்ளது அறிக்கை. ஆனால் உலகமய பொருளாதார தாக்குதலில் இருந்து தமிழ்நாட்டை எப்படி தவெக காப்பாற்ற போகிறது?

மண்டையைக் குடையும் இன்னொரு கேள்வி, மேலே சொன்ன வாக்குறுதிகள், திருவள்ளுவரின் மூன்றாம் பாலுக்குள் எப்படி வருகிறது? இன்பத்துபால் அல்லது காமத்துப்பால் ஆணின் பார்வையில் பெண்ணைப்பற்றிப் பேசுகிறது. ஆணுக்காக உருகும், மருகும் பெண்ணையே முன்னிறுத்துகிறது. இந்தப்பாலில் தவெக பால் கலப்பட பாலல்லவா? கட்சியின் தலைவர், முதலமைச்சர் ஜோசப் விஜய் விளக்கினால் விளங்கிக் கொள்ளலாம்.

இறுதியாக; தத்துவப் பேராசன் திருவள்ளுவரின் திருக்குறள் வளர்ச்சிக்கு பாடுபடப்போவதாக சொல்லும் தவெக, இந்த தேர்தல் அறிக்கையை ஆங்கிலத்தில் எழுதி ஏஅய் கொண்டு மொழிபெயர்த்தது ஏன்? "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பதை உயிர்மூச்சாக எண்ணும் அறிக்கை எல்லோரும் போலவே, "சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்ற பகுதியை சொல்லவில்லையே ஏன்? ❑

— பாசு

## தோழர் பினராயி விஜயன் வீட்டில் சோதனை – இகக(மாலெ) கண்டனம்

அரசியல் பழி வாங்கும் நடவடிக்கையாக ஒன்றிய பாஜக அரசு அமலாக்கத் துறை மூலம் தோழர் பினராயி விஜயன் அவர்கள் வீட்டை அராஜகமாகச் சோதனையிட்டதையும் அந்த அநாகரீகச் செயலைக் கண்டித்து டெல்லியில் போராட்டம் நடத்திய இகக(மா) பொதுச் செயலாளர் தோழர் எம்.ஏ.பேபி உள்ளிட்ட தலைவர்களை டெல்லி பாஜக அரசின் காவல்துறை அராஜகமாக இழுத்துச் சென்று கைது செய்த தையும் இகக(மாலெ)விடுதலை கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

## பேராசிரியர் தோழர் திருமாவளவனுக்கு செவ்வஞ்சலி



எம்எல் இயக்கத்தின் முன்னோடித் தோழரும் பேராசிரியரும் CPML மக்கள் விடுதலையின் மைய குழு உறுப்பினரும் முதுபெரும் தலைவருமான தோழர் திருமாவளவன் அவர்கள் 28/05/2026 அன்று மரணமடைந்தார். தோழரின் விருப்பத்தின் படி அவரது உடல் அரசு மருத்துவக் கல்லூரியில் ஒப்படைக்கப்பட்டது. பேராசிரியர் தோழர் திருமாவளவன் அவர்களின் குடும்பத்தினருக்கும் தோழர்களுக்கும் இகக(மாலெ)விடுதலை கட்சி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. தோழர் திருமாவளவன் அவர்களுக்கு செவ்வஞ்சலி

### சூலூர் சிறுமி பாலியல் படுகொலையைக் கண்டித்து கோவையில் அஇமுபெக ஆர்ப்பாட்டம்



# பிணை – சிறைவாசம் – மாறி மாறி வரும் உச்ச நீதிமன்ற தீர்ப்புகள்.

**– எஸ்.குமாரசாமி –**

உச்ச நீதிமன்றம், தீர்ப்பு வழங்கினால் மட்டும் போதாது, உச்சநீதிமன்றம் நீதி வழங்க வேண்டும் என்ற தலைப்பில், ஜனவரி 16- 31 மா-லெ தீப்பொறி, ஒரு கட்டுரையை வெளியிட்டது.

05.01.2026 அன்று நீதிபதிகள் அரவிந்த் குமார் மற்றும் அஞ்சாரியா அமர்வம், விசாரணையின்றி 28.01.2020 மற்றும் 01.10.2020 முதல் சிறையில் இருக்கும் உமர் காலித் மற்றும் ஷர்ஜில் இமாமுக்கு பிணை மறுத்ததை, நீதி மறுப்பு என விமர்சனம் செய்திருந்தோம்.

எல்லா தீர்ப்புகளும் நீதி வழங்குவதில்லை எனக் கட்டுரையின் தலைப்பில் சொல்லும் போது, சட்டப்படியான சம்பிரதாய ஜனநாயகம் / சமத்துவம் என்பவையும் நிஜ வாழ்க்கையின் ஜனநாயகம் / சமத்துவம் என்பவையும் வேறு வேறு ஆகும் என்ற மார்க்சிய / அம்பேத்கரிய புரிதலையும் சேர்த்தே சொல்கிறோம்.

உச்ச நீதிமன்றத்தின் பிணை மறுப்பு தீர்ப்பு தவறு என்பதற்கு, அரசியல் காரணங்களாக மட்டுமே அல்லாமல், சட்டபூர்வமான விமர்சனங்களையும் குறிப்பிட்டோம். 05.01.2026 தேதிய தீர்ப்பு தவறானது, நமது நிலைப்பாடே சரியானது என, 18.05.2026 அன்று உச்சநீதிமன்றம், "சய்யது அந்த்ராபி எதிர் தேசிய புலனாய்வு முகாமை ஜம்மு" என்ற வழக்கு தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் புலப்படுத்தும்.

★ 18.05.2026 தேதிய தீர்ப்பை நீதிபதிகள் பி.வி.நாகரத்னா மற்றும் உஜ்ஜல் புய்யான் வழங்கி உள்ளனர். அவர்கள் உமர் காலித்துக்கு பிணை மறுக்க, நீதிபதிகள் அரவிந்த் குமார் அஞ்சாரியா அமர்வம் சொன்ன காரணங்களுடன் உடன்படவில்லை.

★ அ. படிநிலை வரிசையில் மேலே உள்ள நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு அதற்கு அடுத்து உள்ள நீதிமன்றங்கள் கட்டுப்பட வேண்டும். ஆ.ஒரே நிலை நீதிமன்றம் என வரும்போது, கூடுதல் எண்ணிக்கை அமர்வ தீர்ப்புக்கு குறைவான எண்ணிக்கை அமர்வம் கட்டுப்பட வேண்டும் என்பதே ஸ்டெயிர் டெசிசிஸ் ( STARE DECISIS) கோட்பாடாகும்.

### நஜீப் தீர்ப்பின் சாரம்

1.நஜீப் வழக்கு தீர்ப்பு, உச்ச நீதிமன்ற மூன்று நீதிபதிகள் அமர்வத்தால் வழங்கப்பட்டது. அதன்படி, அரசமைப்புச் சட்ட உயிர்வாழும் உரிமை, தனிநபரின் சுதந்திரம் தொடர்பான பிரிவு 21க்கு உட்பட்டே, பிணை தொடர்பான கடுமையான பிரிவுகள் கொண்ட UAPA, PMLA, NDPS சட்டங்கள் அணுகப்பட வேண்டும்.

2.பிணை வழங்குவதற்கான அரசமைப்புச் சட்ட அடிப்படை அணுகுமுறை, தண்டிக்கப்படும் வரை, எவர் ஒருவரும் நிரபராதி என்பதேயாகும்.

3.பிணையே விதியாகும், சிறைவாசம் விதிவிலக்காகும்.

4.விசாரணை இன்றி நீண்ட காலம் சிறைவாசம் தொடர்வது, விசாரணை விரைந்து முடிய நீண்ட காலமாகும் என்ற விஷயங்களை கணக்கில் கொண்டு பார்க்கும்போது, அரசமைப்புச் சட்டப்பிரிவு 21 மீறப்படுவது தெளிவாக புலப்படும்.

### சட்ட சர்ச்சை

நஜீப் தீர்ப்பை ஏற்கவில்லை / ஏற்க முடியாது என நீதிபதிகள் அரவிந்த் குமார் அஞ்சாரியா அமர்வம் சொல்லவில்லை. சொல்ல முடியாது. ஏனெனில், இரண்டை விட மூன்று பெரியது.

### 18.05.2026 தீர்ப்புக்கு முன்பும் பின்பும்

அ.05.01.2026 உமர் காலித் தீர்ப்பின் அடிப்படைகள், பின்வருமாறு அமைந்தன: அ.அரசமைப்பு சட்ட 21 ஆம் பிரிவு வாக்குறுதி, கட்டற்ற சுதந்திரம் தொடர்பானதல்ல, அது சுதந்திரம் பறிப்பது, மனம்போன போக்கிலானதாக, மனசாட்சி ஏற்க முடியாததாக, அநியாயமாக இருக்க முடியாது என்று தான் சொல்கிறது.

ஆ.நஜீப் தீர்ப்பு, மனசாட்சி ஏற்க முடியாத கைதுக்கு எதிரானது மட்டுமே ஆகும்.

இ.சிறப்பு சட்டங்களின் கீழ், வழக்கு தாமதமாவது மட்டுமே பிணை வழங்க தீர்மானிக்கும் அம்சமாக இருக்கும் என்ற எந்த இயந்திரத்தனமான விதியையும், நஜீப் தீர்ப்பு வகுக்கவில்லை.

### அந்த்ராபி 18.05.2026 தீர்ப்பின் மறுப்பு.

அ.பிணை வழங்க சாதகமான ஒற்றை காரணமாக நீண்ட சிறைவாசத்தை கருதுவதற்கு எதிரான எச்சரிக்கையே, நஜீப் தீர்ப்பு என்று கருதுவது தவறு.

ஆ. மாறாக, அரசமைப்புச் சட்டக் கோட்பாடுகளை ஓரம் ஒதுக்கி, தொடர்

சிறைவாசத்தை நியாயப்படுத்த, சிறப்பு சட்ட தடையை ஒரே காரணமாக நிறுத்துவதற்கு எதிரான எச்சரிக்கையாகவே, நஜீப் தீர்ப்பு அமைந்துள்ளது.

இ. நஜீத் தீர்ப்பு, ஏற்க முடியாத தாமதம் நீண்ட சிறைவாசம் என்ற நிலைமைகளில் 43 D(5) உபா சிறப்பு சட்ட பிரிவு, அரசமைப்புச் சட்டப் பிரிவு 21 அய் கீழ் தள்ளிவிடாது என்கிறது.

ஈ. நஜீப் தீர்ப்பு படிநிலை வரிசையில், அரசமைப்புச் சட்ட பிரிவு 21, சிறை சட்ட பிரிவு 43 D(5) க்கு மேலே உள்ளது என்ற நிலையை மீட்டெடுத்துள்ளது.

நஜீப் தீர்ப்பு தெளிவுபட, நீண்ட சிறை வாசமும் தாமதமான வழக்கு விசாரணையும் அரசமைப்புச் சட்ட மீறலாக இருக்கும் பட்சம், பிரிவு 43 D(5) உருகி கரைந்து விடும் (MELT DOWN) என்கிறது.

உ.அரசமைப்புச் சட்ட கோட்பாடுகள் அடிப்படையில் காணும் போது, நஜீப் தீர்ப்பு, 43 D(5) சட்ட தடையிலிருந்து சுதந்திரமாகவும், சட்ட தடை இருந்த போதும், அரசமைப்புச் சட்ட பிரிவு 21 அய் உயர்த்திப் பிடிக்கிறது.

**18 5.2026 தீர்ப்புக்கு பிறகு**

மே 22 அன்று உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் அரவிந்த் குமார் பி.பி வராலே அமர்வம், 05.01.2026 தீர்ப்பு மற்றும் 18.05.2026 தீர்ப்புகளுக்கு இடையிலான வேறுபட்ட நிலைகள் தொடர்பாக, உச்ச நீதிமன்றத்தின் எண்ணிக்கையில் கூடுதலான நீதிபதிகள் கொண்ட அமர்வம் அமைத்து தீர்ப்பு பெற, தலைமை நீதிபதியிடம் கோரியுள்ளது.

**அந்த்ராபி வழக்கு மற்றும் உபா சட்ட வழக்குகள் விவரங்கள்.**

•ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்து ஆகஸ்ட் 5-2019 அன்று நீக்கப்பட்டது. அதனையடுத்து அரசியல் செயல்பாட்டில் இருந்த அந்த்ராபி 07.08.2019 முதல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

★ தடுப்பு காவலுக்கு எதிரான உயர் நீதிமன்ற வழக்கு 12.03.2020 அன்று தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டது. 25.04.2020 அன்று அரசு தடுப்புக் காவலை ரத்து செய்தது. 26.06.2020 உச்ச நீதிமன்றம் காவல் உத்தரவை ரத்து செய்தது.

★ இதற்கிடையில் 11.06.2020 அன்று, அவர் போதைப் பொருள் பயங்கரவாதத்தில் ஈடுபட்டதாக வழக்கு பதிவு செய்யப்பட்டது.

★ அவருக்கு மருத்துவ காரணங்களுக்காக 04.01.2022 முதல் 10.03.2022 வரை இடைக்கால பிணை வழங்கப்பட்டது.

★ அவரது முறையான பிணை கோரும் மனு சிறப்பு நீதிமன்றத்தால் 2024 ல் தள்ளுபடி செய்யப்பட்டது. குற்றவியல் மேல்முறையீடு 19.08.2025 அன்று உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

5 வருடங்கள் 11 மாதங்களாக சிறையில் இருந்த அவர் வழக்கில், அரசு தரப்பு 350 சாட்சிகளை விசாரிக்க வேண்டி இருந்தது.

★ மேலே தரப்பட்ட விவரங்களையும் உபா வழக்குகளில் மிகவும் குறைவான தண்டனை சதவீதம், 90 முதல் 95 சதம் விடுதலை ஆகியவற்றையும் கணக்கில் கொண்டு, உச்ச நீதிமன்றம் 18.05.2026 பிணை வழங்கியது.

உச்ச நீதிமன்றம், அமைச்சர் தந்த உபா சட்ட விவரங்களையும் கணக்கில் கொண்டது.

விசாரணை இயக்கப் போக்கே தண்டனையா?

IS PROCESS ITSELF A PUNISHMENT?

பிரிவு 21 சுதந்திரத்தை உறுதி செய்வதா அல்லது வரம்புக்குட்படுத்துவதா?

உச்ச நீதிமன்றம், பிரிவு 21 கட்டற்ற சுதந்திரம் தொடர்பானதல்ல எனவும், அடிப்படை உரிமை பறிப்பை நெறிப்படுத்துவது மட்டுமே எனவும் காண்கிறது. எவர் ஒருவரின் வாழ்வுரிமையும் சுதந்திரமும், சட்டம் வகுத்துள்ள முறைகள் மூலம் அல்லாமல், பறித்திட முடியாது என, இலக்கண ரீதியான விதத்தில், எதிர்மறையாக பிரிவு 21 காணப்படுகிறது. நேர்மறையான அரசமைப்புச் சட்ட தரிசனம் எவ்வாறு இருக்க வேண்டும்? "எல்லோருக்கும் உயிர்வாழும் உரிமையும் சுதந்திரமும் உண்டு என்பது உறுதி செய்யப்படுகிறது; சட்டப்படியான முறைகளில் அல்லாமல், இந்த உரிமைகளை பறிக்க முடியாது" இந்த தரிசனம் மட்டுமே, அரசு அதிகாரம் முன்பு, ஆள் தூக்கி சட்டங்கள் முன்பு நீதித்துறை

உபா சட்டம் இந்தியா முழுவதும்

| வருடம் | கைதானவர்கள் | தண்டிக்கப்பட்டவர்கள் | தண்டனை சதவீதம் |
|---|---|---|---|
| 2019 | 1948 | 34 | 1.75 |
| 2020 | 1321 | 80 | 6.06 |
| 2021 | 1621 | 62 | 3.82 |
| 2022 | 2636 | 41 | 1.56 |
| 2023 | 2914 | 118 | 4.05 |

உபா சட்டம் இந்தியா ஜம்மு காஷ்மீர்

| வருடம் | கைதானவர்கள் | தண்டிக்கப்பட்டவர்கள் | தண்டனை சதவீதம் |
|---|---|---|---|
| 2019 | 227 | 0 | 0 |
| 2020 | 346 | 2 | 0.58 |
| 2021 | 645 | 0 | 0 |
| 2022 | 1238 | 11 | 0.84 |
| 2023 | 1206 | 10 | 0.83 |

*தலை நிமிர்ந்து நிற்க உதவும். எவர் ஒருவரும் குற்றம் நிரூபிக்கப்படும் வரை நிரபராதியே என்பது, வெற்று முழக்கம் அல்ல. அது பிணை தொடர்பான அரசமைப்புச் சட்ட உத்தரவாதமாகும். நீண்ட பல வருடங்கள் விசாரணைக் காலம், தாமதமாகும் விசாரணை என்ற PROCEDUREஅதனளவிலேயே தண்டனையாகிவிடும். அத்தகைய விசாரணை இயக்கப் போக்கே, பிரிவு 21 க்கு புறம்பானது. சட்டப்படி நிரபராதிகள் என்ற தீர்ப்பு பல வருடங்கள் சிறைவாசத்திற்கு பின் வருமானால், சிறைவாச காலத்திற்கு யார் பொறுப்பேற்பது? எப்படி பொறுப்பேற்பது?* ❑

## மேலூரில் பஞ்சமி நில மீட்பு கோரிக்கை மாநாடு!

தமிழ்நாட்டில் பஞ்சமி நில மீட்புக்கான இயக்கம் கடந்த 30 ஆண்டுகளாக நடந்து வருகிறது. காரணை துப்பாக்கிச் சூட்டில் ஜான் தாமஸ் ஏழுமலை சுட்டுக் கொல்லப்பட்டனர். அது முதல் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் நடந்துவருகின்றன. தகவல் உரிமைச் சட்டத்தின் படி விவரங்கள் கேட்பது, வழக்குகள் போடுவது, அரசுக்கு அழுத்தம் கொடுப்பது என பல வடிவங்களில் நடைபெற்று வருகின்றன. தலித், இடதுசாரி அமைப்புகளின் கிளர்ச்சிகள், அழுத்தங்கள் காரணமாக திமுக ஆட்சியில் பஞ்சமி நிலமீட்புக்காக, 2011 ல் நீதிபதி மருதமுத்து ஆணையமும் அமைக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசின் ஆதிதிராவிடர்/பழங்குடி மக்கள் துறை சார்பில் தமிழ்நாட்டிலுள்ள “பஞ்சமி நிலங்கள்” தொடர்பாக மாவட்ட வாரியான நிலவரங்களை சேகரித்து ஒரு தொகுப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டதாகவும் பல அரசு ஆவணங்களிலும் நீதிமன்ற வழக்குகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வளவுக்கும் பிறகும் தலித்துகளிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்கள் அவர்களுக்கு மீண்டும் கிடைக்கவில்லை. பல வகையிலும் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்திலுள்ள நிலவரத்தை பார்ப்போம்.

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் 2548.41ஏக்கர் பஞ்சமி நிலம் உள்ளது. இதில் புஞ்சை நிலம் 2332.34 ஏக்கர், நஞ்சை நிலம் 216.07ஏக்கர்உள்ளது. அரசின்கீழ் 687.71 ஏக்கரும் மக்களிடம் 112.31ஏக்கர் நிலமும் பிற சாதி மக்களிடம் 1748.39 ஏக்கர் நிலமும் உள்ளது. தகவல் அறியும் உரிமையின் கீழ் பெறப்பட்ட விவரங்களை சுட்டிக்காட்டி 2015 ல் மேலூரில் பெரிய போராட்டம் நடந்தது. 35 கிராமங்களிலிருந்து சுமார் 3000பேர் கலந்து கொண்டனர். 2010-12 களில் மேலூர் வட்டத்திலுள்ள பல கிராமங்களில் பளிங்குக் கல் சுரங்கங்களும் பட்டை தீட்டும் தொழிற்சாலைகளும் பெரிதும் வளர்ந்தன. பஞ்சமி நிலங்கள் க்ரானைட் நிறுவனங்களால் ஆக்கிரமிக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகளும் எழுந்தன. இதனால், கீரனூர், செந்திலை பட்டி, தெற்குத்தெரு, கீழவளவு, திருவாதவூர், துவரங்குளம், மூர்க்காபட்டி உள்ளிட்ட பல கிராமங்கள் பாதிக்கப்பட்டன.

தலித் விடுதலை இயக்கம் பெற்ற ஆர்டிஅய் விவரங்கள் படி சுமார் 750 ஏக்கர் பஞ்சமி நிலத்தை க்ரானைட் சுரங்கத்துக்காக ஆக்கிரமித்துள்ளனர். மேனாள் மதுரை மாவட்ட ஆட்சியர் உ.சகாயம் நடத்திய ஆய்வில் சட்டவிரோத குவாரிகள் அரசு நிலத்தையும் பஞ்சமி நிலத்தையும் ஆக்கிரமிக்கப்பட்டு இருப்பதை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தார். இந்த முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபட்டதில் பிஆர்பி ஏற்றுமதி நிறுவனம் முக்கிய குற்றவாளியாகும்.

மற்றொரு ஆர்டிஅய் தகவலின் படி செந்தலைப்பட்டி கிராமத்தில் மட்டும் 150 ஏக்கர் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. கீரனூர் பகுதியில் 190 ஏக்கர் பஞ்சமி நிலம் ஆக்கிரமிப்பை மீட்டுத்தரக்கோரி 2025ல் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்றம் ஆக்கிரமிப்பை அகற்றச் சொல்லி உத்தரவிட்ட பின்னணியில் வழக்கு தொடுத்தவர் தாக்கப்பட்டார்.

இந்த பின்னணியில், 23-05-2026 அன்று மேலூரில் கூடிய இகக(மாலெ) மதுரை மாவட்ட ஊழியர் கூட்டம் பஞ்சமி நிலமீட்பு கோரிக்கை மாநாடு நடத்துவதென முடிவு செய்தது. “தமிழ்நாடு அரசும், மதுரை மாவட்ட நிர்வாகமும் தன்வசமுள்ள பஞ்சமர் நிலங்களை, உடனடியாக உரிய பட்டியல் இன மக்களுக்கு திருப்பி வழங்க வேண்டும்; ஆக்கிரமிப்பாளர்கள் வசமுள்ள பஞ்சமர் நிலங்களை மீட்க உறுதியான நடவடிக்கைகளை துவக்க வேண்டும்!” என்ற கோரிக்கையை வலியுறுத்தியும் இந்த நிலமீட்பு கோரிக்கை மாநாடு நடைபெறுகிறது.

ஜுன் 30, மேலவளவு படுகொலை நாளில் நடத்தப்பட உள்ள இந்த மாநாட்டின் மூலம் விரிவான கிராமங்களுக்கு பரப்புரை இயக்கத்தை கொண்டு செல்வது, பெரும் எண்ணிக்கையில் மக்களைத் திரட்டி தவெக அரசாங்கத்தின், தொகுதி காங்கிரஸ் அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**—க. மெய்யர் சொல்லக் கேட்டு எழுதியது பாசு**

# தமிழ்நாட்டு மக்களின் ஒன்றுபட்ட கோரிக்கை: காவிரியில் மேக்கேதாட்டு அணைத் திட்டம் வேண்டாம்!

**சந்திரமோகன்**

### தமிழ்நாட்டின் காவிரி டெல்டா பாலைவனமாகும்!

மேக்கேதாது திட்டம், தமிழகத்தின் காவிரி டெல்டா விவசாயத்திற்கும், குடிநீர் பாதுகாப்பிற்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாகும். காவிரி ஆற்று பாசனத்தை நம்பியே, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் சுமார் 24 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இலட்சக்கணக்கான விவசாயிகள், விவசாயத் தொழிலாளரின் வாழ்வாதாரம் காவிரியை சார்ந்துள்ளது.

இந்நிலையில், கர்நாடக அரசு புதிய அணை அமைக்க முயற்சிப்பது, தமிழகத்திற்கு வரவேண்டிய காவிரி நீரை குறைத்து, ( ஏற்கனவே காவிரி தண்ணீர் பற்றாக்குறையால் குறுவை, சம்பா சாகுபடிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில்) டெல்டா மண்டலத்தை பாலைவனமாக்கிவிடும்.

காவிரி நீர், விவசாயத்திற்கு மட்டுமின்றி தமிழ்நாட்டின் பல மாவட்டங்களின் குடிநீருக்கும் முக்கிய ஆதாரமாக உள்ளது. எனவே, மேக்கேதாட்டு அணைத் திட்டம் தமிழகத்தின் எதிர்கால குடிநீர்பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கிவிடும்.

### மேக்கேதாட்டு அணை ஏன் கூடாது?

மேக்கேதாட்டு அணை / நீர்த்தேக்கம் விரிவான திட்ட அறிக்கையின்படி, இந்த அணை தமிழ்நாட்டின் எல்லையிலிருந்து 4 கி.மீ தொலைவில், கர்நாடக மாநிலத்தில் காவிரி நதி மற்றும் அர்க்காவதி நதி ஒன்றுசேரும் மேக்கேதாட்டு பள்ளத்தாக்கு அருகில் கட்ட கர்நாடக அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. கர்நாடக மாநில எல்லை முடிந்து, காவிரி ஆறு தடையின்றி தமிழ்நாட்டிற்குள் பாயும் கடைசிப் புள்ளிதான் மேக்கேதாட்டு. இந்த இடத்தில் அணை கட்டுவது, தமிழ்நாட்டுக்கு வரும் மொத்த காவிரி ஆற்றின் நீரையும் திசைத்திருப்பி கொள்ளையடிப்பதற்கு ஒப்பானதாகும்.

இது சுமார் 99 மீட்டர் உயரம் மற்றும் சுமார் 735 மீட்டர் நீளம் கொண்ட கான்கிரீட் கிராவிட்டி வகைப்பட்ட மிகப்பெரிய அணைத் திட்டமாகும். முன்மொழியப்பட்ட நீர்தேக்க திறன் சுமார் 66.8 டிஎம்சி ஆகும். அதாவது அந்த நீர்த்தேக்கம் 66.8 ஆயிரம் மில்லியன் கனஅடி அல்லது சுமார் 66.8 பில்லியன் கனஅடி நீர் அல்லது சுமார் 1,890 பில்லியன் லிட்டர் நீர் கொள்ளளவு கொண்டதாகும். (1 டிஎம்சி அளவிலான நீர் கூட, மக்கள் தொகை மற்றும் நீர் பயன்பாட்டை பொறுத்து, ஒரு பெரிய நகரத்திற்கு பல வாரங்கள் அல்லது பல மாதங்கள் வரை குடிநீர் வழங்கப் போதுமானதாகும்.)

### பெங்களூருவின் குடிநீர் ஆதாரம்

பல்லாண்டுகளாக, பெங்களூருவின் 85% குடிநீர் காவிரி ஆற்றிலிருந்து பெறப்பட்டு குழாய் வழியாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. காவிரி ஆற்றிலிருந்து 100 கி.மீ தூரத்திலிருந்து நீர் கொண்டு வரப்பட்டு, 900 மீட்டருக்கும் மேல் உயரத்திற்கு பம்ப் செய்யப்பட்டு பெங்களூர் நகரத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. பெங்களூர் வாட்டர் சப்ளை அண்ட் சுவரேஜ் போர்டு (BWSSB) நிறுவனம் தினமும் சுமார் 2,225 MLD அளவிலான காவிரி நீரை பெங்களூருக்கு வழங்குகிறது. MLD என்பது நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர் ஆகும். மேலும், பெங்களூரைச் சுற்றியுள்ள பெருநிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் தினமும் சுமார் 500 MLD க்கும் கூடுதலான நீரை பயன்படுத்துகின்றன. இது பெங்களூரு மொத்த நீர் தேவையில் சுமார் 20% ஆகும்.

ஆனால், நகரமயமாக்கத்தாலும் தொழில்மய மாக்கம் மற்றும் ஆக்கிரமிப்புகளாலும், கர்நாடக அரசின் அலட்சியத்தாலும் நகரத்திலிருந்து குடிநீர் ஆதாரங்கள் பெருமளவில் ஒழிக்கப்பட்டுவிட்டன; பழைய உள்ளூர் நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏரிகளும் கூட மறைந்து போய்விட்டன.

பெங்களூரு பெருநகரத்திற்கு, புறநகர் பகுதிகளுக்கு ஏற்கனவே தினமும் சுமார் 2,225 மில்லியன் லிட்டர் காவிரி நீர் வழங்கப்பட்டு வருகிறது. மீண்டும் புதியதாக ஒரு ‘மேக்கேதாட்டு குடிநீர் வழங்கல் திட்டம்’ என்பது பெங்களூருவின் வளர்ந்து வரும் தொழிற்துறை விரிவாக்கத்திற்கு சேவை செய்வதற்காகவே ஆகும்.

கர்நாடகா மாநிலத்தின் குறிப்பாக பெங்களூரு முதலீட்டு மையத்தின் தொழிற்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை விரிவாக்கம், குறிப்பாக கிழக்கு பெங்களூருவின் வைட்ஃபீல்ட், மகாதேவபுரா, ORR பகுதி, எலக்ட்ரானிக்ஸ் சிட்டி ஆகியவற்றின் நிலத்தடி நீருக்கு பெரும் அழுத்தத்தை உருவாக்குகிறது. இத்தகைய நிலைமைகளை எதிர்கொள்ளவே, தொழிற்துறைக்கு நீர் வழங்கவே ‘மேக்கேதாட்டு

குடிநீர் வழங்கல் திட்டம்'' அறிவிக்கப்பட்டுள்ளது.

**திட்டத்தின் பாதிப்புகள்**

விரிவடைந்து வரும் பெங்களூரு பகுதிக்கு, (குறிப்பாக கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு) நீர் வழங்குதல் மட்டுமல்லாமல், 400 மெகாவாட் நீர்மின் உற்பத்தி நிலையம் அமைப்பதும் திட்டத்தில் குறிப்பிடப்படுகிறது.

இந்த நீர்மின் திட்டத்தால் காவிரி வனவிலங்கு சரணாலயத்தின் வனப்பகுதிகள் பெரியளவில் பாதிக்கப்பட அல்லது நீரில் மூழ்க வாய்ப்புள்ளது.

2026 மே மாத நிலவரப்படி, இந்த மேக்கேதாட்டு சமநிலை நீர்த்தேக்கம் / அணைத் திட்டத்திற்கு, இந்தியாவின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) நடைமுறையின் கீழ் இதுவரை இறுதியான சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்படவில்லை. இத்திட்டம் தற்போது முன்மொழிவு மற்றும் மதிப்பாய்வு நிலையிலேயே உள்ளது.

ஆனால், திட்டப் பணிகளை சட்டபூர்வமாகத் தொடங்குவதற்கு முன், அவசியமான சட்டப்பூர்வ அனுமதிகள் பலவும் தேவைப்படுகின்றன; சுற்றுசூழல் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

★மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திலிருந்து (MoEF-CC) சுற்றுச்சூழல் அனுமதி (EC) பெற வேண்டும்.

★வன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வனத்துறை அனுமதி பெற வேண்டும்.

★இத்திட்டம் காவிரி வனவிலங்கு சரணாலயப் பகுதிக்கு பாதிப்பை ஏற்படுத்துவதால், குறிப்பான அனுமதியை பெற வேண்டும்.

★காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் (CWMA) ஒப்புதல் பெற வேண்டும்.

★மத்திய நீர்வள ஆணையத்தின் (CWC) தொழில்நுட்ப அனுமதி பெற வேண்டும்.

இவற்றுக்குப் பிறகும் மேதா பட்கர் போன்ற சுற்றுசூழல் போராளிகள் - அமைப்புகள், உள்ளூர் மக்கள் அமைப்புகள், பாதிக்கப்படும் விவசாயிகள் தரப்பில் கடும் எதிர்ப்புகள் எழுந்தபோதிலும், கார்ப்பரேட் நலன்களுக்காக இத்திட்டத்தை அமலாக்க கர்நாடக அரசாங்கம் பிடிவாதமாக முயற்சிக்கின்றது.

**கர்நாடக அரசின் பிடிவாதம் அநீதியானது!**

'கர்நாடகம் காவிரியில் மேகதாது அணையை கட்டினால் தமிழ்நாட்டுக்கு சட்டப்பூர்வமாக கிடைக்க வேண்டிய தண்ணீர் பங்கு கிடைக்காது' . மேக்கேதாட்டு அணை பிரச்சினை தொடர்பாக திமுக ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மறுசீராய்வு மனுவை உச்ச நீதிமன்றம் 24.05.2026 ல் தள்ளுபடி செய்துள்ளது.

'அணைகட்டும்திட்டத்திற்காக புதிய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இது விரைவில் ஒன்றிய அரசிடம் சமர்ப்பிக்கப்படும்' என்றும், கர்நாடக மாநில துணைமுதல்வர் டி.கே. சிவகுமார் (தற்போது முதலமைச்சர்) கூறியுள்ளார். 'கர்நாடகத்தில் அணைக்கட்ட தமிழகத்திடம் அனுமதி கேட்க வேண்டியதில்லை' என்றும் அவர் கூறியுள்ளார். இது அநீதியானது.

காவிரி விவகாரத்தில், உச்சநீதிமன்றம் மற்றும் காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் 177 டி.எம்.சி நீரைத் தமிழ்நாட்டிற்கு விடுவிக்க வேண்டும் என்று தெளிவான உத்தரவு உள்ளது. இந்தளவு தண்ணீர் இதுவரை வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் கர்நாடக துணை முதலமைச்சர் கூறியுள்ள மேற்கண்ட கருத்து காவிரி தீர்ப்பாயம் மற்றும் உச்சநீதிமன்றத்தின் நீர் பகிர்வு தீர்ப்புக்கும், நதிநீர் பிரச்சனைகள் தொடர்பான சட்ட நெறிமுறைகளுக்கும் எதிரானது. மேலும் ஆறுகள் தோன்றி பாயும் பகுதிகளில் உள்ள நாடுகள் கடைமடை பகுதியில் உள்ள மாநிலங்களின் அனுமதியின்றி அணைகளைக் கட்டுவது கூடாது. இது காவிரி நீரில் உள்ள தமிழ்நாட்டின் பங்கை, சட்டப்பூர்வமான உரிமையை, சர்வதேச நதி நீர் விதிமுறைகளை மறுப்பதாகும்.

எனவே,

தமிழ்நாட்டின் காவிரி நீர் உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமென்பது சட்டபூர்வ மானது. அதை கர்நாடக அரசாங்கம் மதித்து நடக்க வேண்டும்.

மேக்கேதாட்டு அணை திட்டத்திற்கு ஒன்றிய மோடி அரசு எந்தவித அனுமதியும் வழங்கக்கூடாது.

தமிழ்நாடு முதலமைச்சரின் பிரதமருடனான 10 நிமிட முதல் சந்திப்பில் இந்தப் பிரச்சனையை பிரதமரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார். நல்லது. ஆனால் இது போதாது. நீண்டகாலமாக தொடரும் காவிரி சிக்கலில் இருமாநில மக்களிடையே எந்த தரப்பிலிருந்தும் கசப்பையும் பிளவையும் கொண்டுவரும் அணுகுமுறை கூடாது. மேக்கேதாது அணைப் பிரச்சினை மீது அனைத்து விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் சங்கங்கள், அனைத்து அரசியல் கட்சிகளின் கூட்டத்தை உடனடியாக கூட்டிட வேண்டும்.

இதுபோன்ற சிக்கல்களில் பாஜக ஒன்றிய அரசாங்கம் அரசியல் விளையாட்டுகளை நடத்துவது வழக்கம். அதற்கு இடமளிக்காமல் தமிழக மக்கள், விவசாயம், விவசாயிகளின் உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் புதிய அரசாங்கம் பொறுப்புடன் செயல்பட வேண்டும். கர்நாடக காங்கிரஸ் அரசாங்கத்துடன் நட்பு அடிப்படையில் பேச வேண்டும். தமிழ்நாட்டின் நீதி மறுக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். ❑

# கரப்பான்பூச்சி ஜனதா கட்சியும் காவிப் பாசிச ஜனதா கட்சியும்

**– சங்கர்.வீ –**

மே 16 வரை கரப்பான்பூச்சி ஜனதா கட்சி என்று ஒன்று கிடையாது. மே 15 அன்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்யகாந்த், வேலையற்ற இளைஞர்களை கரப்பான் பூச்சிகள், ஒட்டுண்ணிகள் என்றார். நீதிபதியின் வார்த்தைகளால் காயம்பட்ட இளையதலைமுறையின் பிரதிநிதியாக மகாராஷ்ட்ராவைச் சார்ந்த, தற்போது அமெரிக்கா போஸ்டன் நகரில் மேற்படிப்பு படித்து வரும், அபிஜித் டிப்கே, கரப்பான்பூச்சி ஜனதா கட்சி என்ற இணையதள கட்சி ஒன்றை அறிவித்தார்.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி இளைஞர்களை ஏளனம் செய்ததைக் கண்டித்து, ஒரு அரசியல் கேலியாக, விமர்சனமாக, எள்ளிநகையாடி விளையாட்டாக, துவங்கப்பட்டதுதான் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி. கரப்பான்பூச்சி என்று சொன்ன உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியின் அதே ஏளனச் சொல், வேலையற்றோரின், இளைஞர்களின் கேடயமாகவும் வாளாகவும் மாற்றப்பட்டது. வேலையற்றோரும் சோம்பேறிகளும் எப்போதும் இணையத்திலேயே குடியிருப்போரும் கோபக்காரர்களும் அந்த கட்சியில் இணையலாம் என சொல்லப்பட்டது.

**வைரலாகும் கரப்பான்பூச்சி**

கரப்பான்பூச்சி ஜனதா கட்சி உதித்த 10 நாட்களிலேயே சுமார் 2.3 கோடி பேர் அதன் இன்ஸ்டா பக்கத்தை பின் தொடர்ந்தார்கள். இது இந்தியாவிலேயே பெரும் டிஜிட்டல் படை பலத்தை கொண்டிருக்கும் பிஜேபியின் பக்கத்தை பின் தொடரும் 88 லட்சம் பேரைக் காட்டிலும் சுமார் 3 மடங்கு அதிகம் ஆகும். யாரும் எதிர்பாராத வகையில் இளைஞர்களின் மாபெரும் டிஜிட்டல் எழுச்சியாக உருவெடுத்து, காட்டுத் தீ போல் பரவி வருகிறது.

இது யார் அந்த கட்சியை தொடங்கினாரோ, அவர் மட்டும் நடத்தும் கட்சியாக இல்லாமல் நாடு முழுவதுமுள்ள ஜென் Z தலைமுறை அதனை தமதாக வரித்துக் கொண்டிருக்கிறனர். ஒரு பாடலை உருவாக்கினால், அது 100 புத்தம்புதிய பாடல்களாக தெறிக்கிறது. 5 கோரிக்கை முன்வைக்கப்பட்டால், அது எண்ணற்ற கோரிக்கைகளாக வடிவம் பெறுகிறது. ஒரு இணையதளம் முடக்கப்பட்டால், அடங்க மறுத்து, பல புதிய இணைய தளங்களாகப் புத்துயிர் பெற்று எழுகிறது.

**குலைநடுங்கும் பெருமுதலாளிகள்**

"நான் ஒரு கரப்பான்பூச்சி" என்கிற அந்தக் குரலை, பாடலை கேட்டு ஒன்றிய அரசாங்கம் நடுநடுங்குகிறது. நாட்டின் பிரதமர் மோடி கலவரம் அடைகிறார். ஆளும் கட்சியான பிஜேபி பதறுகிறது. அவர்களின் அரசியல் கருத்தியல் குருவான ஆர்எஸ்எஸ் கலங்குகிறது. அதோடு கூடவே, இந்த டிஜிட்டல் கரப்பான் பூச்சி இயக்கத்தைக் கண்டு கார்ப்பரேட் பெருமுதலாளிகளும் குலைநடுங்குகிறார்கள். ஏன்?

**டிஜிட்டல் இயக்கம்**

ஏனென்றால், அது ஒரு ஆக்டோபஸாக பூதாகரமாக வளர்ந்து வருகிறது. அது இன்றைய இளைய தலைமுறையினரின் மனசாட்சி. பிஜேபி கட்டமைத்து வரும் சமூகத்திலிருந்து எழும் கலகக் குரல், இச் சமுதாயத்தில் அந்நியமாகி நிற்கும் இளைஞர்களின் அவலத்திற்கு எதிரான போர்க்குரல். அநீதிகளை எதிர்த்து புறப்பட்டுள்ள இந்த டிஜிட்டல் இயக்கம் பலமடங்கு பெருகுவதற்கான களம் இந்த சமுதாயத்தில் நிலவுகிறது. அருவருப்பாக கருதப்படும் கரப்பான் பூச்சிகளின் ஒரு முக்கியமான பணி தூய்மைப் பணி. இந்த டிஜிட்டல் கரப்பான் பூச்சிகள் இச் சமுதாயத்தின் சீர்கேடுகளை தூய்மைப் படுத்தும் இயக்கமாக மாறிவிடுமோ என்கிற பயம்.

'தொழில்நுட்பப் புரட்சியை நோக்கிய இந்திய பயணத்தை இந்த கரப்பான்பூச்சிகள் பின்னோக்கி தள்ளுகின்றன. இது போன்ற உள்நாட்டு அபாயங்களைப் பற்றி ஏற்கனவே சாணக்கிய ராஜதந்திரம் எச்சரித்து இருக்கிறது' என தன்னுடைய ஆர்கனைசர் இதழ் கட்டுரையில் குறிப்பிடுகிறது ஆர்எஸ்எஸ். வழக்கம்போல், இது பாகிஸ்தான் சதி என்கிறது, பிஜேபி.

**கரப்பான்பூச்சிகளின் கொள்கை அறிக்கை**

இது போல, அரசை விமர்சிக்கும் கருத்துக்கள் வருமானால், அதன் சரி–தவறை, அது எழுவதற்கான சமூக, பொருளாதார காரணிகளை கண்டறிந்து அவற்றை தீர்ப்பதற்குப் பதிலாக, அவற்றை சதித் திட்டம் என வர்ணிப்பதுதான் உலகம் முழுக்க பாசிஸ்டுகள் கடைபிடித்த ஆயுதமாகும். அதைத் தான் பிஜேபியும் செய்கிறது.

நீதிபதியின் தவறான வர்ணனைகளுக்கு எதிராக உருவான கரப்பான்பூச்சி இயக்கம், இப்போது நீதிமன்றத்தைத் தாண்டி, ஒன்றிய பிஜேபி அரசின் ஜனநாயக விரோத தன்மைக்கு எதிரான, வேலையற்ற வளர்ச்சி மாடலுக்கு எதிரான, நீட்டுக்கு எதிரான, கல்வி அமைச்சருக்கு எதிரான அரசியல் பரிமாணம் பெற்று வருகிறது.

அது பிஜேபி அரசின் தவறுகளுக்கு எதிரான விமர்சனமாக சிஜேபியின் கொள்கை அறிக்கை அமைந்திருக்கிறது. நிதிபதிகள் ஓய்வு பெற்ற பிறகு அரசியல் பதவிகள் வழங்குவது ஊழல் என்கிறது. நீதித் துறையின் சுதந்திரத்தை பறிப்பதாகும், அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானதாகும் என்கிறது.

தேர்தல் ஆணையத்தின் அரசு சார்பு

செயல்பாட்டை, வாக்குத் திருட்டை விமர்சிக்கிறது. நாடாளுமன்றத்தின் மொத்த எண்ணிக்கையை உயர்த்தாமலே பெண்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்கிறது.

ஊடக சுதந்திரத்தை நிலைநாட்டிட அதானி–அம்பானிகளின் ஊடக லைசென்சுகள் பறிக்கப்பட வேண்டும், பொய்ப் பிரச்சாரம் மேற்கொள்ளும் ஊதுகுழல் ஊடகவியலாளர்களின் சொத்து சேர்த்த விதம் விசாரிக்கப்பட வேண்டும் என்கிறது.

மக்கள் தீர்ப்புக்கு மாறாக, எம் எல் ஏக்கள் – எம் பிக்கள் விலை கொடுத்து வாங்கப்படும் அசிங்கமான அரசியலை தடுத்திட, அத்தகைய கட்சித் தாவும் மக்கள் பிரதிநிதிகள் அடுத்த 20 ஆண்டுகளுக்கு தேர்தலில் பங்கேற்க தடை விதிக்க வேண்டும் என்கிறது.

இந்த அனைத்து கோரிக்கைகளுமே, மோடியின், பிஜேபியின் பாசிச போக்குக்கு எதிரான குறிப்பான விமர்சனங்கள் ஆகும். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத பிஜேபி அதை சதி என முத்திரை குத்துகிறது. இது சரிதான் என கருதும் இளைய தலைமுறை அதை ஆதரிக்கிறது. இதுதான் கரப்பான் பூச்சி ஜனதா கட்சி.

**அவமான ரோபோ**

இந்தியா தொழில்நுட்ப புரட்சியை நோக்கி பயணிக்கிறது என்கிறார் மோடி. அப்படியானால், இந்திய நாட்டின் மிகச் சிறந்த பொறியாளர்களும் தொழில்நுட்ப வல்லுனர்களும் ஏன் வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள்?

டெல்லியில் நடந்த செயற்கை நுண்ணறிவு சர்வதேச மாநாட்டைப் பற்றிப் பீற்றிக் கொள்ளும் ஆர்எஸ்எஸ் அந்த மாநாட்டிற்கு, சட்டைகளை கழற்றி எதிர்ப்பைத் தெரிவித்த இளைஞர்களை தேச அவமானம் என்றது. ஆனால், அதே மாநாட்டில் சீனத்திலிருந்து இறக்குமதி செய்த எந்திர மனிதனை (ரோபோ), நம் நாட்டு கண்டுபிடிப்பாக பச்சைப் பொய் சொல்லி, உலக நாடுகளின் முன்னால் அசிங்கப்பட்டது, ஆர்எஸ்எஸ்ஸிற்கு அவமானமாகத் தெரியவில்லை.

**கடமை தவறினால் கண்டிப்பது அராஜகமா?**

அரசமைப்புச் சட்டப்படியான தலைமைத் தேர்தல் அதிகாரியை, சட்டவிரோத செயல்பாடுகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டுமென கரப்பான்பூச்சிகள் கூறுவது பெரும் அராஜகம், ஜனநாயகத்தை முடக்கும் வன்முறை என்கிறது ஆர்எஸ்எஸ். அப்படியென்றால், மேற்கு வங்கத்தில் 35 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு வாக்குகளை மறுத்தது, 50 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்களை பட்டியலில் இருந்து நீக்கியது, அதன்மூலம் திருட்டுத்தனமாக ஆட்சியைக் கைப்பற்றியது தான் ஜனநாயகமா? அரசமைப்புச் சட்ட அடிப்படையிலான தேர்தல் ஆணையம் தனது அரசமைப்புச் சட்டப்படியான கடமையை செய்யத் தவறி இருக்கிறது. அந்த அநியாயத்தை எதிர்த்து கேள்வி கேட்டால், அதைத் தண்டிக்க வேண்டும் என்றால் அராஜகமா?

**ஆர்எஸ்எஸ்ஸின் ஆணாதிக்கம்**

நாடாளுமன்றத்திலும் அமைச்சரவையிலும் பெண்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு வேண்டும் என்கிறது சிஜேபி. 140 கோடி மக்கள் தொகை கொண்ட நாட்டில் அப்படிச் செய்ய முடியாது என்கிறது ஆர்எஸ்எஸ். இது பெண்களை இரண்டாம்தர குடிமக்களாக நடத்தும், வெறும் போகப்பொருளாக கருதும் ஆர்எஸ்எஸ்ஸின் ஆணாதிக்க சிந்தனையை, பெண்களுக்கு நாடாளுமன்றத்தில் இடஒதுக்கீடு கிடைக்கவிடாமல் செய்துவிட்டார்கள் என்று மோடி வடித்த நீலிக் கண்ணீரை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

**பறிபோகும் நீதித் துறையின் சுதந்திரம்**

நீதித்துறை அரசுக்கு அடிமையாக அல்லாமல், சுதந்திரமாக இயங்க வேண்டும். தன்னுடைய எதிர்கால சுய நலன்களுக்காக, அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக தீர்ப்பளிக்கும் விதத்தில் நீதித் துறை சீரழியக் கூடாது. அதற்கு தலைமை நீதிபதிகளுக்கு பதவிக் காலம் முடிந்த பிறகு வேறு அரசு பதவிகள் வழங்கக் கூடாது என்கிறது சிஜேபி. இது சர்வாதிகாரம், பிற்போக்குத்தனம் என்கிறது ஆர்எஸ்எஸ். மூன்றாவது தூணான நீதிமன்றங்கள் சுதந்திரமாக அல்லாமல் ஆர்எஸ்எஸ் அடிமையாகவே நீதிபதிகள் இருக்க வேண்டும் என்கிறார்கள்.

**ஊதுகுழல் ஊடகங்கள்**

ஊதுகுழல் ஊடகங்களின் ஊடகவியலாளர் சொத்துக்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும். அதானி, அம்பானிகளின் ஊடக லைசென்ஸ் ரத்து செய்யப்பட வேண்டும் என்கிறது கரப்பான் பூச்சி ஜனதா கட்சி. அது ஸ்டாலினிஸ்ட், கம்யூனிஸ்ட் சென்சார் முறை என்றும் அது உள்நாட்டு மூலதனத்தின் மீதான கடும் தாக்குதல் என்றும் கூப்பாடு போடுகிறது ஆர்எஸ்எஸ்.

**பெருமுதலாளிகள் விசுவாசம்**

சிஜேபிக்கு எதிராகப் பேசி, தனது பெருமுதலாளிகள் விசுவாசத்தையும் வெளிச்சம் போட்டு காட்டியிருக்கிறது ஆர்எஸ்எஸ். ”உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பம் வேண்டுமானால், உலகத் தரம் வாய்ந்த மூலதனம் வேண்டும். கார்ப்பரேட் மூலதனம் என்பது தேசத்தின் உள்ளார்ந்த, உயிர்த்துடிப்பு மிக்கது, தவிர்க்க முடியாதது. அதுவே வேலை வாய்ப்பை உருவாக்கும் ஆற்றல் படைத்தது. அத்தகைய மூலதன சிருஷ்டிகளை தாக்கக் கூடாது என்கிறது ஆர்கனைசர். அது, இந்த தேசம் என்பது உழைக்கும் மக்களுக்குச் சொந்தமானது என்பதை மறுதளிக்கிறது.

**ஜென் Z செய்யும் ஆட்சி மாற்றம்**

கரப்பான்பூச்சிகளுக்கு எதிராக ஒரு விரிவான பதில் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆர்எஸ்எஸ் உள்ளாகி இருக்கிறது. இந்த கரப்பான்பூச்சி இயக்கம் இருக்கலாம், மறையலாம். ஆனால், நிலவுகின்ற ஆட்சிமுறை, சமுதாய, பொருளாதார பிரச்சனைகள் காரணமாக வேறொரு கரப்பான் பூச்சி மீண்டும் உதிக்க வாய்ப்புள்ளது என்பதை மறுக்க முடியாது. ஏனென்றால், உலகம் முழுவதும் ஜென் Z தலைமுறை எழுந்து வருகிறது. லத்தீன் அமெரிக்கா, பொலிவியா, வெனிசூலா முதல் சமீபத்திய பங்களாதேஷ், இலங்கை, நேபாளம் வரை ஆட்சி மாற்றங்களுக்கு இளைய தலைமுறையின் எழுச்சியே காரணமாகியிருக்கிறது. அதுபோன்றதொரு நாள் இந்தியாவிலும் வருவது வெகுதொலைவில் இல்லை என்பதைத்தான் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் உதயமும் அது வைரலாகும் வேகமும் நமக்கு சுட்டிக்காட்டுகின்றன. ❑

# உச்சநீதிமன்றத்திற்குள் கரப்பான் பூச்சிகள் நுழைந்துவிட்டன

**– எஸ்.குமாரசாமி –**

இறுதி நீதிமன்றம் உச்ச நீதிமன்றம் என்பதால், விசாரணைக்கு வரும் வழக்குகளில் தரப்பினர்கள் இல்லாதவர்கள் மீது பொதுவாக சேற்றை வாரி இறைக்க, வழக்கில் தொடர்பில்லாத விஷயங்களைப் பற்றி நினைத்ததை எல்லாம் பேச தமக்கு வானளாவிய அதிகாரம் இருப்பதாக, தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் கருதுகிறார்.

போராட்டக்காரர்களை "அந்தோலன் ஜீவி" என்று பழித்தார். சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வேலை வெட்டி இல்லாமல், நாட்டின் ஒவ்வொரு வளர்ச்சி திட்டத்தையும் எதிர்ப்பதாகக் கடிந்து கொண்டார். கொடி பிடிக்கும் சங்கங்களால்தான் தொழில்கள் முடக்கப்படுகின்றன எனக் கருத்துரை வழங்கினார். இப்போது இந்தியாவின் இளைஞர்களை இளம் வழக்கறிஞர்களை, சமூக ஊடக / தகவல் அறியும் உரிமை செயல்பாட்டாளர்களை, "கரப்பான் பூச்சிகள்" "ஒட்டுண்ணிகள்" என இளக்காரமாகவும் அகங்காரமாகவும் சாடி உள்ளார்.

திருமிகு தலைமை நீதிபதி தொடர்பாகவும், உச்ச நீதிமன்றத்தின் இன் ஹவுஸ் *(In House)* அதாவது நீதிமன்றத்திற்கு உள்ளேயே நீதிபதிகள் பற்றிய புகார்களை விசாரிக்கும் முறை தொடர்பாகவும், ஆர்த்தி ராகவன் என்ற மும்பை வழக்கறிஞர் *SERVING JUSTICES BUT NOT JUSTICE* "நீதிபதிகளுக்கு சேவை நீதிக்கு சேவை அல்ல" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை தி இந்து நாளேட்டில் எழுதினார்.

அவர் குறிப்பிட்ட இரண்டு விஷயங்கள் தொடர்பாக.

திரு.ரஞ்சன் கோகாய் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த போது, 2019ல் அவர் மீது நீதிமன்ற பெண் பணியாளர் ஒருவர், பாலியல் துன்புறுத்தல் புகார் அளித்தார். அந்தப் பெண் விசாரணை ஏதும் இல்லாமல் வேலை நீக்கம் செய்யப்பட்டார். இந்த புகார், உச்ச நீதிமன்றத்திற்கும், நீதித்துறை சுதந்திரத்திற்கும் எதிரான சதி என, ஆவேசமாய் பேசினார்கள். இன் ஹவுஸ் விசாரணையில், அதாவது, நான்கு சுவர்களுக்குள் காதும் காதும் வைத்தாற் போல், அந்த பெண்ணின் புகார் மீது, அந்த பெண்ணின் பங்கேற்பு இல்லாமல் விசாரணை முடிக்கப்பட்டு, விசாரணை அறிக்கையை அந்த பெண்ணுக்கு தராமலே, அவரது புகார் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்தப் பெண்ணின் புகாரே மாபெரும் சதி என்று சத்தம் எழுந்ததே தவிர, சாரமோ சாட்சியமோ இல்லாமல், சதி புகார் வெற்று புகார் ஆனது. திருமிகு கோகாய் ஓய்வு பெற்ற பிறகு, அந்தப் பெண் முழு பின் சம்பளத்துடன் மீள வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். மனிதர்கள் பொய் சொல்லலாம் சூழ்நிலைமைகள் பொய் சொல்லாது என்ற சாட்சியக் கோட்பாட்டிலிருந்து, உச்ச நீதிமன்றம், அந்தப் பெண்ணின் புகாரை நியாயமாக விசாரித்ததா அல்லது தலைமை நீதிபதியை பாதுகாக்க முயன்றதா என, வாசகர்கள் முடிவுக்கு வரலாம்.

அதிகாரம் எதுவரை பாயும் என திரைப்படம் எடுக்கத்தக்க, உச்சநீதிமன்ற வரலாற்றின் இந்த அத்தியாயம் பற்றி, நீதித்துறை நெடுக ஒரு கனத்த மவுனம் கடைபிடிக்கப்படுகிறது.

திரு. சூரியகாந்த் அவர்கள், நவம்பர் 2025 ல் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆனார். அவர் பஞ்சாப் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தபோது பிணை வழங்கப் பணம் பெற்றார், சட்டவிரோதமாய் சொத்து குவித்தார் என்ற புகார்கள் இவர் மீது எழுந்தன. உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி கெஹார், திரு சூரியகாந்துடன் நீதிபதியாய் சில வருடங்கள் பணியாற்றிய உச்ச நீதிமன்ற நீதிபதி திரு ஏ.கே. கோயலிடம் விசாரித்தபோது, திரு ஏ.கே. கோயல் சொத்து குவிப்பு, அடுத்தடுத்த நிலை நீதிபதிகள் நியமனத்தில் ஊழல் சாதீயம் என்ற புகார்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்றார். உச்ச நீதிமன்றம் திரு. சூரியகாந்தை இமாச்சல் பிரதேச உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக்க பார்த்தபோது திரு ஏ.கே.கோயல் தலைமை நீதிபதிக்கு திரு சூரியகாந்த் மீதான புகார்களை விசாரிக்குமாறு கடிதம் எழுதினார். அந்த புகார்கள் என்ன ஆனது என, இதுவரை தெரியவில்லை.

உச்ச நீதிமன்றம் தகவல் அறியும் உரிமை, கருத்து சுதந்திரம் வெளிப்பாட்டு சுதந்திரத்தின் ஒரு பகுதி எனவும், அது பங்கேற்பு ஜனநாயகத்தின் ஒரு பகுதி எனவும், திரும்பத் திரும்பச் சொல்லி உள்ளது. ரிபப்ளிக் தொலைக்காட்சியின் அர்ணப் கோஸ்வாமி "நாடு தெரிந்து கொள்ள விரும்புகிறது" என அன்றாடம் சொல்வார். இது வரை உயர்மட்ட நீதித்துறை தொடர்பான எண்ணற்ற புகார்கள் எழுந்துள்ளன. புகார்கள் என்ன ஆயின என நாட்டிற்கு தெரியாது. முதலமைச்சர்கள், மத்திய / மாநிலஅமைச்சர்கள், தண்டிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இன்று வரை எந்த ஒரு நீதிபதியும் தண்டிக்கப்படவில்லை. குற்றவாளி என அறிவிக்கப்படவில்லை.

இந்தியாவில் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் NCERT என்ற நிறுவனம் உள்ளது. கல்வி, சமூகம், அறிவியல் போன்ற விஷயங்களில் தேர்ந்த அறிஞர்கள் பாடத்திட்டம் வகுக்கும் பணியும், இங்கு நடக்கிறது. எட்டாம் வகுப்பு பாடத்தில், சமூகத்தில் நீதித்துறையின் பங்கு என்ற ஒரு பாடமும், அதில் நீதித்துறையில் ஊழல் என்று ஒரு துணைத் தலைப்பும் இருந்தது. இது தொடர்பான செய்தி ஒன்று, இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் வந்தது. நீதித்துறை பற்றி நூற்றுக்கணக்கான புகார்கள் வந்துள்ளன என்றும், நீதித்துறையின் வெவ்வேறு மட்டங்களில் ஊழல் இருப்பதை மக்கள் காண்கின்றனர் என்றும், சில வரிகள் இடம் பெற்றுள்ளன. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் உடனே, அந்த புத்தகத்தின் எல்லா பிரதிகளையும் பறிமுதல் செய்யுமாறும், இந்த புத்தகம் பொதுவெளியில் எந்த வகையிலும் இருக்கக் கூடாது என்றும், NCERT இயக்குநர் எங்கு எப்படி யாரால் இந்த மாபெரும் தவறு நடந்தது என விவரங்கள் தருமாறும் 26.02.2026 அன்று உத்தரவிட்டது. 11.03.2026 அன்று, தனது 26.02.2026 உத்தரவு பற்றியும் பொறுப்பில்லாமல் எழுதுகிறார்கள் என்றும், அவர்களை அரசாங்கம் அடையாளம் கண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த பாட தயாரிப்பில் ஈடுபட்ட மூவரிடமிருந்தும் ஒன்றிய மாநில அரசாங்கங்கள் விலகி நிற்க வேண்டும் எனவும் உத்தரவிட்டது. புத்தகத்திற்கு தடை. பாடம் எழுதியவர்களுக்கு எவரும் வேலை கொடுக்கக் கூடாது என தடை.

விசாரணை இல்லாமல் எவரும் தண்டிக்கப்படக்கூடாது, புத்தகங்களை கருத்து உரிமைகளை பறிக்கக் கூடாது என்ற கோட்பாடுகளை தலைமை நீதிபதி திரு. சூரியக்காந்த் தலைமையிலான அமர்வம் பொருட்படுத்தவே இல்லை. 22.05.2026 அன்று இந்த மூவரும் வேண்டும் என்று எழுதவில்லை என்றும், அவர்களுக்கு வேலை தடை போட்டதை அகற்றுவதாகவும், பெரிய மனதுடன் சொன்னது. ஆனால் ஒன்றிய அரசாங்கம் இனி அந்த மூவருக்கும் வேலை தரப்போவதில்லை என சொன்னது. நடைமுறையில், கருப்பு பட்டியலில் அவர்கள் தொடர்வார்கள்.

எட்டாம் வகுப்பு மாணவர்கள், 13ஆம் வயதில் இருப்பவர்கள். ஸ்மார்ட் போன் பயன்படுத்துபவர்கள். அவர்களுக்கு கரப்பான் பூச்சி பற்றியும், தலைமை நீதிபதி பேசுவது பற்றியும் கூட, தெரிந்து கொள்ள நிறையவே வாய்ப்புண்டு.

எட்டாம் வகுப்பு மாணவர்கள் பதின்ம வயதினர். அவர்கள் மீது தந்தை வழி கட்டுப்பாடு, தார்மிகக் காவல் தேவையில்லை. பாரதியின் பாப்பா பாட்டு வரிகளைச் சற்று கவனப்படுத்தி கொள்வோம்.

பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா! - அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!

பாப்பாக்களே, பாதகம் செய்பவர்களை பிரித்துப் பார்த்து அணுக முடியும் என்றால், பதின் பருவத்தினரால் ஊழல் பற்றி பகுத்துப் புரிந்து கொள்ள முடியாதா?

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.பி.பருச்சா, 20 சதவீதம் நீதிபதிகள் ஊழல் வயப்பட்டவர்கள் என்றார். மிகுந்த மரியாதைக்குரியவரான நீதிபதி கிருஷ்ண அய்யர் குடியரசு தலைவருக்கு 2011 ல் எழுதிய கடிதத்தில், "ஊழலை தண்டிக்கும் மாபெரும் அதிகாரம் படைத்த நீதித்துறை என்ற புனிதமான கருவியையே ஊழல் பாதித்துள்ளது. ஒரு ஊழல் நீதிபதி கூட பிடிக்கப்பட்டு தண்டிக்கப்படவில்லை" என்று குறிப்பிட்டார். சட்ட அமைச்சராக இருந்த மூத்த வழக்கறிஞராகக் களம் பல கண்ட சாந்தி பூஷன் 16 தலைமை நீதிபதிகளில் 8 பேர் ஊழல் பாதிப்பு உள்ளவர்கள் என்றார். விசாரிக்குமாறும், தான் சொன்னது தவறு என்றால் தண்டிக்குமாறும், கேட்டுக் கொண்டார். சட்ட அமைச்சர் கடந்த 10 வருடங்களில், தலைமை நீதிபதியிடம், நீதிபதிகள் மேல் 8,630 புகார்கள் வந்ததாக குறிப்பிடுகிறார்.

அப்படி இருக்க, நீதித்துறையில் ஊழல் என்று படித்தாலே, மாணவர்கள் எல்லா நீதிபதிகளும் ஊழல் பாதிப்புடையவர்கள் என நம்புவார்கள் எனக் கருதுவது, மாணவர்களின் பகுத்தறிவைக் குறைத்து மதிப்பிடுவதாகாதா?

கரப்பான் பூச்சிகள் எப்படி எந்த சூழலில் உச்ச நீதிமன்ற வளாகத்தில் தோன்றினார்கள்? ஊடகங்களைச் சந்தித்து, அவர்கள் கேள்விகளைச் சந்திக்கக் கூட விரும்பாத பிரதமர் உள்ள நாட்டில், மாற்று கருத்துள்ளவர்களும் சிறுபான்மையினரும் வேட்டையாடப்படும் நாட்டில், டபுள் இன்ஜின் புல்டோசர் ஆளும் நாட்டில், கார்ப்பரேட் எடுபிடி-கைத்தடி ஊடகங்கள் உள்ள நாட்டில், உழைப்புக்கு மதிப்பில்லாத நாட்டில்தான் திரு. சூரியகாந்த் இளைஞர்களை, வழக்கறிஞர்களை சமூக ஊடக / தகவல் அறியும் உரிமை செயல்பாட்டாளர்களை கரப்பான் பூச்சிகள், போலி பட்டதாரிகள், ஒட்டுண்ணிகள் என்று விமர்சிக்க முடிந்துள்ளது.

இந்திய மக்கள் சார்பாக, இந்தியா சார்பாக, நாம் திரு.சூரியகாந்திற்கு நன்றி சொல்ல வேண்டும். ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும் என்று சொல்லப்படுகிறது. அரசியல் மீது, பிரதிநிதித்துவ நிறுவனங்கள் மீது, அதிருப்தி கொண்டுள்ள, விலகி நிற்கிற சில கோடி புதிய தலைமுறையினரை, இந்தியாவின் சமூக பொருளாதார அரசியல் நிலைமைகள் பற்றி, கரப்பான் பூச்சி என்ற ஒரு சொல்லால் யோசிக்க வைத்ததற்காக, இந்திய ஜனநாயகம் அவருக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளது. ❑

# மாற்றத்தை வரவேற்போம்; தொடர்ச்சியை எச்சரிப்போம்; எதிர்ப்போம்!

**– ரமேஷ் கணபதி –**



முப்பத்தைந்து பேர் கொண்ட விஜய் அமைச்சரவையில், அவர் உட்பட 34 பேர் புதியவர்கள். தமிழ்நாட்டின் முதல் கூட்டணி ஆட்சி, அமைச்சரவையில் 8 தலித் அமைச்சர்கள் (22.8%). 4 பெண் அமைச்சர்கள்! மிக முக்கியமான மாற்றம்தான். தவெக ஆட்சியமைக்க முதலில் ஆதரவுக் கரம் நீட்டிய காங்கிரசுக்கு இரண்டு அமைச்சர்கள். விசிகவின் வன்னியரசு சமூக நீதித்துறை அமைச்சராகவும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் ஷாஜஹான் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றுள்ளனர். நீதிபதி சந்துரு ஆணையத்தின் பரிந்துரையைத் தொடர்ந்து திமுக அரசு, முறையாக அரசாணை வெளியிட்டு, ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளை சமூக நீதி மாணவர் விடுதிகள் என மாற்றியது. இப்போது தவெக அரசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் பெயரை, அமைச்சர் பொறுப்பேற்ற அன்றைய நாளிலிருந்து சமூக நீதித்துறை என மாற்றியுள்ளது. தவெக அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமின்றி, தவெகவின் மாவட்ட, வட்ட நிர்வாகிகளும்கூட அம்மா உணவகங்கள், அரசுஅலுவலகங்கள், அரசு மருத்துவமனைகள், அறநிலையத்துறைக்குட்பட்ட கோயில்கள், பேருந்து நிலையங்கள் ஆகியவற்றிற்கு சென்று ஆய்வு நடத்துகிறார்கள். அதில், அவர்களின் ஆர்வக் கோளாறும் அனுபவமின்மையும் வெளிப்படுகிறது. சிலர் இதை திட்டமிட்டு செய்வதும் தெளிவாகத் தெரிகிறது.

இவை ஒரு புறம் இருக்க, தவெக அரசு பதவியேற்று 15 நாட்களுக்குள் 25 கொலைகள், 4 இரட்டைக் கொலைகள், 19 பாலியல் குற்றங்கள். முன்பொருமுறை கருணாநிதி அவர்கள் சொன்னது போல் ‘ஈரல் கெட்டுப் போன காவல் துறை’, ஊழல் மலிந்த, கரடு தட்டிப் போன அரசு நிர்வாகம், ஜெயலலிதா, பழனிச்சாமி, ஸ்டாலினால் விஜய்க்கு கையளிக்கப்பட்டிருக்கும் போது அதை வைத்துக் கொண்டு எதையும் உடனடியாக மாற்றிவிடவோ, குற்றங்களை உடனடியாக தடுத்துவிடவோ முடியாதுதான். ஆனாலும், ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு கூருணர்வும் குறைந்தபட்ச பொறுப்புணர்வும் கடமையுணர்ச்சியும் வேண்டும்தானே. தேர்தலின்போது தாங்கள் என்ன பேசினோம் என்பதை மனதில் வைத்து செயல்பட வேண்டாமா? கோவை சூலூர் சிறுமி பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது கண்டு நாடே பதறியது. “குதிரை வேக அரசின்” முதலமைச்சர் ஆமை வேகத்தில் இரண்டு நாள்கள் கழித்து அறிக்கை விடுகிறார். முதல் தொழில் துறை பெண் அமைச்சரான கீர்த்தனா, அரசியல் கேள்விகளை அப்புறம் பார்க்கலாம் என்கிறார். அமைச்சர் அருண்ராஜ், இரண்டு பேரை கைது செய்து சிறையில் அடைத்தாயிற்று இதற்கு மேல் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டு அதிர்ச்சியளிக்கிறார். அந்தச் சிறுமியின் உடல் அவரின் தாயிடம் காட்டப்படாமலேயே அவசர அவசரமாக எரிக்கப்பட்டது மட்டுமின்றி, அந்த தாய் மீதே அவதூறு பரப்பப்படுகிறது. இதெல்லாம் எதற்காக? யாரைக் காப்பாற்ற?. ‘பெண்கள் – குழந்தைகள் பாதுகாப்பு’ பற்றிய விழிப்புணர்வும் கூருணர்வும் முதலில் மேலிருந்து – முதலமைச்சர், அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசியல் கட்சியினரிடம் இருந்து வரவேண்டும். குழந்தைகள் பாதுகாப்பு சமூகத்தின் பொறுப்பு என்றால் சமூகத்தின் பிரதிநிதியான அரசாங்கத்தின் பொறுப்பு. ‘பெண்களின் காவலன்’ என்று சொல்லிக் கொள்ளும் தவெக அரசாங்கம் செயல்படவும் வேண்டும்.

நடக்கிற பல குற்றச் செயல்களுக்கு மதுவும் போதையுமே காரணமாக இருக்கும்போது ‘மதுவிலக்கு’ எப்போது என்று கேட்டால், மது விலக்கை கொண்டு வந்தால், டாஸ்மாக் கடைகளை மூடிவிட்டால், கள்ளச் சாராயமும் போதை கலாச்சாரமும் பெருகிவிடும் என்று தவெக அமைச்சர் விக்னேஷ் சொல்கிறார். முந்தைய அதிமுக, திமுக அமைச்சர்களும் இதையேதான் சொன்னார்கள். புதிய அமைச்சர் ‘டாஸ்மாக்’கிற்கான கொள்முதலில் வெளிப்படைத்தன்மை இருக்குமென்கிறார் சில நிறுவனங்களில் இருந்து மட்டும் என்றில்லாமல், எல்லா நிறுவனங்களிடமிருந்தும் கொள்முதல் செய்யப்படுமென்கிறார். “பாட்டிலுக்கு பத்து ரூபாய்” வாங்குவது நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில்தான் நடக்கிறது என்று அருமையாக விளக்கமளிக்கிறார்

அமைச்சர். ஆனால், 717 டாஸ்மாக் கடைகளை மூடிவிட்டதாகச் சொல்லும் தவெக அரசு, அதில் வேலை பார்த்த தொழிலாளரின் வேலை, வாழ்க்கை பற்றி பேச மறுக்கிறது.

அதேபோல், தேர்தலுக்கு முன்பு தூய்மைப் பணியாளர்களின் பணி நிரந்தரம், தனியார்மயமாக்க எதிர்ப்பு கோரிக்கைகளுக்காக குரல் கொடுத்த விஜய் இப்போது முதலமைச்சராகியுள்ளார். தொழிலாளரின் கோரிக்கை அப்படியே இருக்கிறது. வரிசை கட்டி வரும் கார்ப்பரேட் முதலாளிகளைப் பார்க்கும் முதலமைச்சர் விஜய், “ஏன் தொழிலாளர் பிரதிநிதிகளை, தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து பேசக்கூடாது? என்று பொருத்தமாகவே கேட்கிறார் ஏஅய்சிசிடியு–உழைப்போர் உரிமை இயக்க மாநிலத் தலைவர் கு.பாரதி.

தமிழ்நாட்டில் மருத்துவத் துறை சிறந்து விளங்குகிறது என்று சொல்லும் சுகாதாரத் துறை அமைச்சர் அருண்ராஜ், ஏழைகளுக்கான அரசு மருத்துவமனைகளை மேம்படுத்துவதை பற்றி யோசிக்க வேண்டும். ஆனால், அமைச்சரானவுடன் முதல் வேலையாக, 8000 தனியார் மருத்துவமனைகள் திறப்பதற்கு தற்காலிக அனுமதி வழங்கிட உத்தரவிட்டுள்ளார். இது மருத்துவத் துறையை தனியார்மயமாக்குவதை நோக்கித் தள்ளும் நடவடிக்கையல்லவா.

ஐந்து ஏக்கர் வரை நிலம் வைத்துள்ள விவசாயிகளின் கூட்டுறவு வங்கிக் கடன்கள் முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்படும், 5 ஏக்கருக்கு மேல் வைத்திருக்கும் விவசாயிகளின் பயிர்க் கடனில் 50 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும் என்று தேர்தலுக்கு முன் உத்தரவாதம் அளித்திருந்த திரு. விஜய், இப்போது ரூபாய் ஐம்பதாயிரம் வரையிலான கடன் மட்டுமே முற்றிலும் தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்துள்ளார். இதை விவசாயிகளின் போராளியும் திருவண்ணாமலைத் தொகுதி தவெக வேட்பாளருமான அருள் ஆறுமுகம் கண்டித்துள்ளார். தவெக அரசின் இந்த அறிவிப்புக்கு எதிராக விவசாயிகள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். தொழில் துறை அமைச்சரும் சிவகாசி சட்டமன்ற உறுப்பினருமான கீர்த்தனா, அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்கு புதிய உத்தியாக, விளம்பர வீடியோ போட்டுக் கொண்டிருக்கிறார். ஆறாயிரம் கோடியில் விருதுநகர் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி கொண்டுவரப்படும் என்கிறார். அவர், தனக்கு கிடைத்துள்ள நல்வாய்ப்பைப் பயன்படுத்தி, ஆண்டுதோறும் பலரது உயிரைப் பறித்துக் கொண்டிருக்கும் பட்டாசு ஆலை வெடி விபத்துகளைத் தடுக்க, தனக்கு வாக்களித்த அம்மக்களின் வாழ்க்கையைப் பாதுகாக்க என்ன செய்யலாம் என்று சிந்திக்க வேண்டும்.

தேர்தலுக்கு சில நாள்களுக்கு முன்பு திருநெல்வேலி மாவட்டம் நான்குநேரியில் நடந்தப்பட்ட கொலை போல், இப்போது தென்காசி மாவட்டம், ஆலங்குளம் நெட்டூரில் ஆதிக்க சாதிவெறிக் கும்பல், தலித் குடும்பத்தினரின் திருமண வீட்டிற்குள் புகுந்து கொலை வெறித் தாக்குதல் நடத்தியுள்ளது. 6 பேர் கொடுங்காயங்களுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். சம்பவம் நடந்து மூன்று நாள்கள் ஆகியும் அரசுத் தரப்பில் இருந்து யாரும் வந்து பார்க்கவில்லை என்கிறார்கள் பாதிக்கப்பட்டவர்கள். தவெக அரசு, மருத்துவமனையில் இருப்பவர்களுக்கு உயர்தரமான சிகிச்சை கிடைக்கச் செய்ய வேண்டும். மேலும், இந்த சாதியாதிக்க வெறியர்கள் விரைந்து தண்டிக்கப்படுதை உறுதி செய்வதோடு, எதிர்காலத்தில் சாதியாதிக்க வெறித் தாக்குதல்கள், கொலைகள் நிகழாமல் தடுத்திட காத்திரமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சிறுமிகள், பெண்கள், தலித்துகள் மீது நடத்தப்படும் கொடுங்குற்றங்களுக்கு, தொடர்புடைய காவல்துறை உயர் அதிகாரிகளைப் பொறுப்பாக்கி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். சாதியாதிக்க, ஆணவப் படுகொலைகள் தடுப்பு சிறப்புச் சட்டம் வேண்டுமென்று இடதுசாரிகள், ஜனநாயக சக்திகள் நீண்டகாலமாக கோரி வருகின்றனர். இடதுசாரிகளின் நிபந்தனையற்ற ஆதரவுடன் ஆட்சியமைத்திருக்கும் தவெக, இந்த கோரிக்கையை உடன் நிறைவேற்றி, பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த 8 பேர் அமைச்சர்களாக இருப்பதற்கு பொருளுள்ளதாக ஆக்க வேண்டும்.

அரசியல் ஆதாயம் தேடி, திமுக, அதிமுக, மதிமுக கட்சிகளுக்குள் மாறுவது என்பது புதியது கிடையாது. ஆனால், அதிமுக எம்எல்ஏக்கள், பதவியேற்ற பதினைந்தே நாளில், எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு, அதே வேகத்தில் ஆளுங்கட்சியில் சேர்ந்துள்ளனர். உத்தரவாதம் எதுவுமில்லாமலா, பதவியைத் துறந்து தவெகவில் தஞ்சமடைந்தார்கள்? ஆனால் இது வாக்களித்த மக்களுக்குச் செய்யும் கூட்டுத் துரோகமல்லவா? ‘தவெக, அடிப்படையில் மாறுபட்ட கட்சி’, என்ற பிரகடனம் மாறிவிட்டதா? மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற ‘கால அவகாசம்’ கேட்ட விஜய், இதுபோன்று ஜனநாயகத்தை வலுவிழக்கச் செய்யும் செயல்களைச் செய்வதில் ‘குதிரை வேகம்’ காட்டுவது ஏன்?

திருச்செந்தூர் கோயிலில், முருகப் பெருமானை முன்னின்று தரிசிக்க ஆளுக்கு ஆயிரம் ரூபாய் என அறநிலையத்துறை அமைச்சரிடமே லஞ்சம் வாங்கிய அர்ச்சகர்களிடம் மன்னிப்புக் கடிதம் வாங்கியதைக் கண்ட மக்கள், ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில், 10 ரூபாய் வாங்கிய தூய்மைப் பணியாளருக்கு பணி நீக்கம், அர்ச்சகருக்கு மன்னிப்பா? என்ற கேள்வி வைரலானவுடன் அர்ச்சகர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். அமைச்சர் ரமேஷின் செயலைக் காட்டிலும் அந்த ஊழல் அர்ச்சகர்களுக்கு ஆதரவாக, திமுக சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணன் இறங்கியதுதான் அதிர்ச்சியளிக்கிறது. மக்கள் தீர்ப்பை தவெக அரசு தவறாக புரிந்து கொள்ளக் கூடாது. அவர்கள் ‘உண்மையான மாற்றத்தை’ எதிர்பார்த்து வாக்களித்திருக்கிறார்கள்.

உண்மையான மாற்றத்தைக் கொண்டு வரவில்லையென்றால் மக்கள் மாற்றத்தைக் கொண்டுவருவார்கள். அதற்கு எம்எல் கட்சி, இடதுசாரி, முற்போக்கு, ஜனநாயக சக்திகளுடன் இணைந்து முன் களத்தில் நிற்கும். ❑

# “ஊழியர்களே அனைத்தையும் தீர்மானிக்கிறார்கள்”

2026 ஏப்ரலில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் சிபிஐஎம்எல் கட்சி 13 தொகுதிகளில் போட்டியிட்டது. கட்சி முடிவின்படி, மாநில நிலைக்குழு உறுப்பினர் என்ற முறையில் திருவிடைமருதூர் தொகுதி வேலைகளில் கலந்து கொண்டேன். ஏப்ரல் 10 அன்று, பாபநாசம் தொகுதி வேட்பாளர் தோழர் மாசிலாமணி அறிமுக பொதுக்கூட்டத்தில், கட்சி தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது. தோழர் குமாரசாமி அவர்கள் வெளியிட நான் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. மறுநாள், பாபநாசம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் வேட்பாளருடன் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டோம்.

ஏப்ரல் 11, திருவிடைமருதூர் தொகுதி வேட்பாளர் டி. கண்ணய்யனை ஆதரித்து நடந்த பொதுக் கூட்டத்தில் பேசினேன். அடுத்து, திருவிடைமருதூர் தொகுதி வேலைகள் பற்றி தோழர்களுடன் திட்டமிட்டோம். தோழர்களிடம் உற்சாகம் குறைந்து காணப்பட்டது. நிதி நெருக்கடி, வேலை செய்யும் முன்னணிகளின் மிகக் குறைவான எண்ணிக்கை குறைவான நாட்களில் செய்ய வேண்டிய மிக அதிக வேலைகள், இவை பற்றி கலந்துரையாடினோம். தயக்கங்களும் பல்வேறு கேள்விகளும் வெளிப்பட்டன.

கடலூர் ராஜசங்கர், மயிலாடுதுறை இளங்கோ, வீரச்செல்வன், தொகுதியைச் சேர்ந்த மாநிலக் கமிட்டி உறுப்பினர்கள் ஜெசிந்தா, தவச்செல்வம், வேட்பாளர் கண்ணய்யன் ஆகியோர் கூடி திட்டமிட்டோம். காலை நேரத்தில் நமது வேலைகள் உள்ள பகுதிகளில் வீடு வீடாகச் சென்று காலை 8 மணி முதல் 11 மணிவரை வாக்கு சேகரிப்பது, வாக்காளர்களிடம் நிதி திரட்டுவது, அதுபோல் மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை வாக்கு சேகரிப்பது, இடைப்பட்ட நேரத்தில் தனி நபர்களை பார்த்து நிதி வசூல் செய்வது என்று முடிவு செய்தோம். வேலைகள் முன் செல்ல, தோழர்கள் வீரச்செல்வன், சிலம்பரசன், ராஜசங்கர், இளங்கோவன் உதவினார்கள். ஓரளவிற்கு தயக்கமும் தேக்கமும் உடைந்தது.

இந்தத் தொகுதியில் பல பத்தாண்டுகளாக கட்சி வேலை உள்ளது. பல வெற்றிகரமான போராட்டங்கள் நடந்துள்ளன. கம்யூனிஸ்ட் போராளிகள் சந்திரசேகர், சந்திரகுமாரை இழந்து பின்னடைவை எதிர்கொண்டு கடந்து வந்திருக்கிறோம். இந்தப் போராட்டத்தில் தப்பி பிழைத்தவர்தான் கண்ணய்யன். நமது வேலைப் பகுதியில் பரவலாக அறிமுகமானவர். தொடர்ச்சியான வேலை, போராட்டங்கள் மூலமாக சில வெற்றிகளையும் பெற்றுள்ளோம். மறைந்த தோழர் டிகேஎஸ் ஜனார்த்தனன் நீண்டகாலம் தங்கியிருந்து பல வெற்றிகரமான போராட்டங்களை வழிநடத்திய பகுதி.

300க்கு மேற்பட்ட கட்சி உறுப்பினர்கள், கிளைகள், உள்ளூர் கமிட்டிகளும் உள்ளன. மாவட்டக் கமிட்டி உள்பட கட்சி அமைப்புகளை செயல்பட வைப்பதில் தோழர்கள் சிரமப்படுகிறார்கள். பரந்த மக்கள் மத்தியில் கட்சிக்கு நல்ல அறிமுகமும் உள்ளது. மேலிருந்து வருகின்ற முடிவுகளை அமல்படுத்துகிற நிலையே உள்ளது. சொந்த வேலைத் திட்டத்தின்படி செயல்படுவதில்லை. ஆனாலும் இந்தத் தேர்தலில் நாள் ஒன்றுக்கு குறைந்தது 10 பேராவது தேர்தல் வேலையில் ஈடுபடுத்த முடிந்தது. இத்தொகுதியில் இரண்டு ஒன்றியங்கள், ஒரு நகராட்சி உள்பட 95 ஊராட்சிகளில் நாம் 50க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் நமது தேர்தல் பிரச்சாரத்தை கொண்டு சென்றோம். நமது கவனம் குவிக்கப்பட்ட வேலைப் பகுதிகளிலுள்ள 15 ஊராட்சிகளில் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தோம். 3000க்கும் மேற்பட்ட குடியிருப்புகளில் உள்ள பத்தாயிரத்துக்கு மேற்பட்ட வாக்காளர்களைச் சந்தித்தோம்.

ஏராளமான துண்டு பிரசுரங்கள் ஊர்க்கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், வாகன பரப்புரை வடிவங்களைப் பயன்படுத்தினோம். தொகுதியிலிருந்து 65 ஆயிரம், திருவள்ளூர் மயிலாடுதுறை, கடலூர் கமிட்டிகளிடமிருந்து 35 ஆயிரம் ரூபாய் என ஒரு லட்சம் ரூபாய்க்கு மேலாக செலவு செய்யப்பட்டது. இன்னும் கூடுதலாகச் செய்திருக்க முடியும். மேலும் பல தோழர்களை வேலையில் ஈடுபடுத்தியிருக்கவும் முடியும்.

சந்திக்கும் பிரச்சனைகளுக்கு கட்சி உறுப்பினர்களிடம் குறைகளைத் தேடுவதற்கு மாறாக கட்சி மாநிலக் கமிட்டி தோழர்களிடம் தேடுவது தேவைப்படுகிறது. சடங்குத் தனமான வேலைகளுக்கு மாறாக உணர்வு பூர்வமான வேலைகள் தேவைப்படுகின்றன. வெளி மாவட்ட தலைமைத் தோழர்கள் தொகுதியில் தங்கி வேலை பார்க்கும் போது, வேட்பாளர் உட்பட அங்குள்ள தலைமைத் தோழர்கள் இயல்பாக இணைந்து பணியாற்றுவது அவசியம். இதில் வெளிப்படையான இடைவெளியை பார்க்க முடிந்தது. கட்சி அரசியலில் புரட்சிகர ஈர்ப்பும் நம்பிக்கையும் கொண்ட முன்னணிகள் தேவைப்படுகிறார்கள். உணர்வு பூர்வமான வேலைக்கு அதுவே முதல் தேவை. நமது கட்சி தேர்தல் அறிக்கையிலுள்ள அரசியல் செய்திகளால் பொதுமக்களை ஈர்க்கும் வேலை

தேர்தலில் மிக மிக அடிப்படையான வேலை. கடுமையான அரசியல் போட்டி, பலவகையான இழுப்புகள் தீவிரமாக இருக்கும் தேர்தலில், நம்முடைய ஆதரவை வாக்குகளாக மாற்றுவதும் அதைத்தாண்டியும் வாக்குகள் பெறுவதும் தான் தேர்தல் வேலை. இதில், மேம்போக்கான, சடங்குத்தனமான வேலை உதவாது. நாம், தஞ்சை மண்ணில் சாணிப் பாலுக்கும் சவுக்கடிக்கும் முடிவு கட்டிய, செங்கொடி பாரம்பரியத்துக்குச் சொந்தக்காரர்கள். இன்றைய மாறியுள்ள சூழலில், செங்கொடி கட்சிக்கு, வேட்பாளருக்கு வாக்களிக்க வைப்பது கிராமப்புர வர்க்கத்தை திரட்டிக் கொள்வதுதான் தேர்தல் வேலை.

**கம்யூனிஸ்ட் ஊழியர் தேவை**

தொகுதியில் 11 நாட்கள் தங்கியிருந்து வேலை பார்த்தேன். திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து கட்சி உறுப்பினர், உண்டியல் வசூல், தனிநபர் வசூல் என மொத்தம் ரூபாய் 40 ஆயிரம் கொடுக்க முடிந்துள்ளது. நீண்ட இடைவெளிக்குப்பிறகு கட்சி வேலையில் புது உத்வேகத்துடன் முழுமையாக பணியாற்றியதை உணர முடிந்தது.

எனது வேலை அனுபவங்களை தொகுத்துப் பார்க்கும்போது, நீண்டகால போராட்டப்பகுதியிலும் கூட தேக்கம் ஏற்படலாம். புதிய விரிவாக்கத்தின் மூலம் தேக்கத்தை விரட்ட வேண்டும்; கட்சிக்கும் பரந்த மக்களுக்கும் இடையே துண்டிக்கப்பட்டுள்ள அரசியல் பிணைப்பை மீண்டும் கொண்டுவர வேண்டும். இளம் புதிய பெண், இளைஞர் முன்னணிகளை வளர்த்தெடுக்க வேண்டும். தேர்தல், குறுகிய காலத்தில் நடைபெறும் அரசியல் போராட்டமாகும். இதன் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிடுவதும் தவறு; மிகைப்படுத்துவதும் தவறு. இதை பொருத்தமான முறையில் உணர்ந்து வாக்குகளைப் பெறும் அரசியல் பரப்புரையைக் கட்டமைக்க வேண்டும். இந்த அனைத்து வேலைகளுக்கும் துடிப்புள்ள கம்யூனிஸ்ட் தொழில்முறை ஊழியர்கள் அவசரத் தேவை என்பதை தோழர் ஸ்டாலின் சொற்களில் உணர்ந்து கொள்ள முடிந்தது. "ஊழியர்களே அனைத்தையும் தீர்மானிக்கிறார்கள்"! ❑

**– எஸ்.ஜானகிராமன்**

# புதுச்சேரியில் மே நாள் பொதுக் கூட்டம்




ஏஐசிசிடியு சார்பில் 21.5 .2026 உழைப்பாளர் உரிமை கோரிக்கைகள் விளக்க 140 ஆவது மே நாள் பொதுக்கூட்டம் ஏஐசிசிடியு புதுச்சேரி மாநிலத் தலைவர் சோ.பாலசுப்பிரமணியன் தலைமையில் புதுச்சேரி சுதேசி பஞ்சாலை எதிரில் நடைபெற்றது. ஏஐசிசிடியு ஆலோசகர் எஸ்.குமாரசாமி சிறப்புரையாற்றினார். சிபிஐஎம்எல் கட்சியின் தமிழ்நாடு செயலாளர் பழ.ஆசைத்தம்பி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றினார். ஏஐசிசிடியு மாநிலச் செயலாளர் எஸ் .புருஷோத்தமன், துணைத் தலைவர் விஜயா, ஜனநாயக கட்டுமான தொழிலாளர் சங்கம் மாநிலச் செயலாளர் எஸ். அருள்,பிஎஸ்என்எல் ஓய்வூதியர் நல்வாழ்வு சங்கம் புதுச்சேரி செயலாளர் கே .ஆர் .சிவகுமார் , காரைக்கால் மாவட்ட ஏஐ சிசிடி யு பொறுப்பாளர் ஏ.எஸ். சிங்காரவேலு, சிங்காரவேலர் மீனவ தொழிலாளர் சங்கம் மாநிலச் செயலாளர் சி.எஸ்.சகாயராஜ் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோத நான்கு புதிய சட்ட தொகுப்புகளை புதுச்சேரி அரசு செயல்படுத்துவதை நிறுத்தி வைக்க வேண்டும். சட்டத் தொகுப்புகளையும் விதிமுறைகளையும் ஆய்வு செய்ய ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி,தொழிற்சங்க தலைவர்கள்,நிபுணர்கள் கொண்ட உயர் மட்ட குழு அமைக்க வேண்டும், குறைந்தபட்ச சட்ட கூலியை உயர்ந்து கொண்டிருக்கும் விலைவாசிக்கு ஏற்ப அனைத்து தொழில்களிலும் குறைந்த பட்ச சம்பளம் ரூபாய் 42 ஆயிரம் என மாற்றி அமைக்க வேண்டும், அனைத்து கிராமங்களிலும் கிராமப்புற வேலை உறுதி திட்ட வேலைகளை தொய்வில்லாமல் அளித்திட வேண்டும். நாள் கூலி ரூபாய் 600 வழங்க வேண்டும். விபி ஜி ராம் ஜி சட்டத்தை ரத்து செய்திட சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மேகதாது அணை கட்டும் திட்டத்தை தடுத்து நிறுத்தக் கோரி இடதுசாரிகள் ஆர்ப்பாட்டம்




காவிரி நதிநீர் பங்கீடு, நடுவர் மன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றின் இறுதித் தீர்ப்புக்கு எதிராக தொடர்ந்து பேசியும் செயல்பட்டும் வருகிற கர்நாடக அரசையும் தமிழ்நாட்டின் தண்ணீர் உரிமையை பாதுகாப்பதில் அலட்சியம் காட்டி, வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசையும் கண்டித்து, மேகதாது அணை கட்டும் திட்டத்தை தடுத்து நிறுத்த தமிழ்நாடு அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியும் 29.05.2026 அன்று தஞ்சாவூரில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்), இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்– லெனினிஸ்ட்) லிபரேசன் ஆகிய இடதுசாரி கட்சிகளின் சார்பில் பெருந்திரள் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் இகக(மா) மாநிலச் செயலாளர் தோழர் பெ.சண்முகம், இகக மாநிலச் செயலாளர் தோழர் மு.வீரபாண்டியன், இகக(மாலெ) மாநில நிலைக்குழு உறுப்பினர் தோழர் அ.சிம்சன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

## தலித் மக்கள் மீது தொடரும் கொலை வெறித் தாக்குதல்கள் இகக[மாலெ] கண்டனம்

மீண்டும் ஒரு சாதியாதிக்க, போதை வெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தென்காசி மாவட்டம் ஆலங்குளம் தாலுகா நெட்டூர் கிராமத்தில் திருமண வீட்டில் கூடியிருந்த தேவேந்திர குல வேளாளர் இளைஞர்கள் பெண்கள் மீது சாதியாதிக்க வெறியர்கள் கடும் போதையில் வந்து கொடூரமாகக் கொலை வெறித் தாக்குதல் நடத்தியுள்ளார்கள். இந்தச் செயலை இகக(மாலெ) வன்மையாகக் கண்டிக்கிறது. குற்றவாளிகள், அவர்களுக்கு உடந்தையாக இருந்தவர்கள் அனைவரும் வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, விரைந்து தண்டிக்கப்பட வேண்டும். சாதியாதிக்க, ஆவணக் கொலைகள் தடுப்பு சிறப்புச் சட்டம் விரைந்து கொண்டுவரப் பட வேண்டும். சமூக நீதித் துறை என்ற பெயர் மாற்றம் மட்டுமே போதாது. உண்மையான சமூக நீதி நிலை நாட்டப்பட வேண்டும் என இகக(மாலெ) கேட்டுக் கொள்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர் தர சிகிச்சை அளிக்க வேண்டும். அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். 31.05.2026 அன்று இகக(மாலெ) மாநில நிலைக்குழு உறுப்பினர்கள் தோழர் சங்கர பாண்டியன், வழக்கறிஞர் G.ரமேஷ், புரட்சிகர இளைஞர் கழக மாநில தலைவர் தோழர் சுந்தர்ராஜ், கட்சியின் நெல்லை மாவட்ட செயலாளர் தோழர் கணேசன், தென்காசி மாவட்ட செயலாளர் தோழர் வேல்முருகன் மற்றும் தென்காசி மாவட்ட கட்சி தோழர்கள் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி பல்நோக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர். தொடர்ந்து சம்பவம் நடந்த நெட்டூர் கிராமத்திற்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட பகுதி மக்களிடமும் ஊர் கமிட்டி நிர்வாகிகளிடமும் ஆறுதல் தெரிவித்ததோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி எப்போதும் துணை நிற்கும் என உறுதி அளிக்கப்பட்டது.






**MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013**
**Posted at Egmore RMS/1 Published on 1st and 16th of every month R.DIS: 2804/17**

# பெட்ரோல், டீசல், கேஸ் விலை உயர்வைக் கண்டித்து....







Owned and **Published** by **S.Balasundaram** from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by **Chennai Offset Printers,** 19/1,21/2, KitabathKhan Bahadur street, Ellis Rd, **Chennai** - 600002. **Editor G.Ramesh**